விலை ரூபா 1-25

# ஈழநாடு
THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

(1958 — வெள்ளி விழா ஆண்டு — 1983)
மலர் 26 கார்த்திகை 27 ரபி.அவ் 7 இதழ் 301
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 13-12-83

ஜனாதிபதி அஹிம்சைமுறையில் அணுக

# வடக்கில் யுத்தத்துக்கு தயாராகிறார்கள்

## பொல்காவலை எம்.பி. கூறுகிறார்

(கொழும்பு)

''அஹிம்சை முறையில் பேச்சுவார்த்தை மூலம் தமிழ் மக்களுடைய பிரச்னைகளைத் தீர்த்து வைக்க ஜனாதிபதி முயற்சி எடுத்து வருகிறார். ஆனால் வடக்கில் யுத்தத்துக்கு தயாராகிறார்கள்''.

இவ்வாறு பொல்காவலை எம்.பி. திரு சுனில் ரஞ்சன் ஜெயக்கொடி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு திரு. ஜெயக்கொடி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;

''வடக்கு, கிழக்கிலிருந்து தமிழ் இளைஞர்கள் ஒரு வாரத்

8-ம் பக்கம் பார்க்க)

# "கச்சதீவில் நிரந்தர இராணுவ முகாம்வேண்டும்"

## அத்தனகல எம்.பி. கோரிக்கை

### "இந்திய கப்பல் சேவையை நிறுத்தவும்"

(இ. கந்தசாமி)

**கச்சதீவில் இராணுவ முகாம் ஒன்று நிரந்தரமாக நிறுவப்படவேண்டும் என்று அத்தனகல எம். பி. திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி பாராளுமன்றத்தில் நேற்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

பாதுகாப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் பேசுகையில் இவ்வாறு கோரிக்கைவிடுத்த அத்தனகல எம். பி தொடர்ந்து பேசுகையில் தமிழ் மக்களின் பிரச்னைகுறித்த பேச்சுவார்த்தைகள் முடியும்வரை தலைமன்னாருக்கும் இந்தியாவுக்குமிடையிலான கப்பல் சேவை நிறுத்தப்படவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இச்சேவைக்குப்பதிலாக கொழும்பு - தூத்துக்குடி சேவையை நடத்தலாம் என்றும் தெரிவித்த அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''யாழ்ப்பாணத்தில் பயங்கரவாதம்மட்டுமின்றி சாதிப் பிரச்னையும் நிலவுகிறது. இதனுல் பொலிஸ்நிலையங்கள் இருக்கவேண்டியது அவசியம்.

(8-ம் பக்கம் பார்க்க)

### "ஈழத்தை விரும்பாதவர்கள் கூட இராணுவத்தை வெறுக்கிறார்கள்"

(கொழும்பு)

''வடக்கு கிழக்கு மக்களின் பழக்கவழக்கங்கள் சம்பிரதாயங்கள் பற்றி எதுவும் தெரியாத ஆயுதப்படையினர் அங்கு கடமையாற்றுவதாலேயே மக்களுக்கு அவர்கள் மீது வெறுப்பும் மோதலும் ஏற்படுகிறது

இவ்வாறு பத்தேகம எம் பி. திரு. அமரசிறி தொடங்கம (சுதந்திரக்கட்சி) பாராளுமன்றத்தில் பேசுகையில் கூறினர். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

வடக்கில் தியேட்டர்களில் கூட ஆண்கள் ஒருபக்கமும் பெண்கள் ஒரு பக்கமாகவும் தான் இருப்பார்கள். இதனை அறியாத எமது படைவீரர்கள் பெண்கள்பக்கத்தில்போய் படம்பார்த்தால் வெளியாருக்கும் அவர்களுக்குமிடையே மோதல்கள் ஏற்பட்டன

அவர்களுடைய கலாச்சாரத்துக்கு இணைந்து செயற்படாததாலேயே மோதல்கள் ஏற்படுகின்றது. இதன்காரணமாகத்தான் 13 பேர் கொல்லப்பட்டார்கள்.

(8ம் பக்கம் பார்க்க)

# ஹர்த்தால் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பாதிக்கப்பட்ட தமிழ் பல்கலைக்கழக மாணவரை தமிழ் பகுதிகளில் கல்விகற்க வசதி செய்யவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து நாளை புதன்கிழமை பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இத்தினத்தில் பூரணகடையடைப்பு நடத்துமாறும், பாடசாலைகளை பகிஷ்கரிக்குமாறும். கோரப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில், அனைத்து தமிழ் பேசும் மக்களும் பங்குபற்ற வேண்டுமென்று கேட்கப்பட்டுள்ளது.

''தமிழ்மாணவர்கள்''எனத் துண்டுப்பிரசுரத்தின் இறுதியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பஸ் சேவை நாளை நடக்காது

## இன்று 4 மணியுடன் நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பஸ்நிலையத்திலிருந்து சகல பஸ்சேவைகளும் இன்று பிற்பகல் நான்கு மணியுடன் நிறுத்தப்படும் என்று வ. போ. சபை உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

குறிகாட்டுவான், ஆனிய

(8-ம் பக்கம் பார்க்க)

## 'யுனிசெவ்' இணைப்புக்குழு முதல் தடவையாக நாளை கூடுகிறது

(யாழ்ப்பாணம்)

,யுனிசெவ்' திட்டத்தின் முதலாவது இணைப்புக்குழுக் கூட்டம், உள்ளூராட்சிஅமைச்சில் நாளை புதன்கிழமை நடைபெறவிருக்கிறது.

இக்கூட்டத்தில் யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சீ வீ. கே. சிவஞானம் கலந்து கொள்வார். இணைப்புக்குழு உத்தியோகத்தர்கள் பங்குபற்றும் இக்கூட்டத்தில் 'யூனிசெவ்' திட்டங்கள் பற்றி ஆராயப்படும்.

யாழ்ப்பாண மாநகரசபையின் அபிவிருத்திக்கு யுனிசெவ் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது

ஆரம்பத்தில் இத்திட்டத்தின் கீழ் யாழ். மாநகரசபை சேர்க்கப்படவில்லை. இறுதியாக நவம்பரில் சேர்க்கப்பட்டதால் அவசரமவசரமாக யாழ். அபிவிருத்திபற்றிய விபரங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (க)

## கொழும்பில் சுவரொட்டிகள்

(கொழும்பு)

சமூக ஒற்றுமையை வலியுறுத்தி கொழும்புநகரெங்கும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

இலங்கைப்படத்துடன் தமிழ், சிங்கள, முஸ்லீம்களின் படங்கள் காணப்படும் இச்சுவரொட்டிகளில் சமூக ஒற்றுமையை வலிவுறுத்தும் வசனங்கள் எழுதப்பட்டுள்ளன.

பச்சை வெள்ளை நிறத்தில் இவை காணப்படுகின்றன. (கு)

## சர்வஜன வாக்கெடுப்பு

(கொழும்பு)

''உத்தேச வட்டமேசை மகாநாட்டின் யோசனைகள் மக்களின் அங்கீகாரத்துக்கு விடப்படும். இதுகுறித்து மக்களின் அபிப்பிராயத்தைஅறிய சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும்.''

இவ்வாறு வர்த்தக அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி நேற்று கொழும்பில் நடைபெற்ற தபால் ஊழியர் சங்கக்கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார். (கு)

## திருமலை வேலுப்பிள்ளை காலமானார்!



(யாழ்ப்பாணம்)

பிரபல சோதிடர் திருமலை க. வேலுப்பிள்ளை நேற்று முன்தினம் காலமானார்.

(8-ம் பக்கம் பார்க்க

உ

நாளை

பண்டத்தரிப்பில்

கோலாகலமான

திறப்பு விழா

லிங்கம் றேட் சென்ரர்





14-12-83

புதன்கிழமை

காலை 8-46 முதல்

9-30 மணி வரை

வரும் சுபவேளையில்

திறப்புவிழா

நடைபெறவிருப்பதால்

அன்பர்கள் - நண்பர்கள்

வாடிக்கையாளர்கள்

அனைவரையும் அன்புடன்

அழைக்கின்றோம்

லிங்கம் றேட் சென்ரர்

30, பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

(10397)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

ஈ. வை. தொடர்பு இலக்க மொரீஸ் மைனர் கார் நல்ல நிலையில் உடனடியாக விற்பனைக்குண்டு. மனோகரன். ஆஸ்பத்திரி வீதி ஊர்காவற்றுறை 10522

---

கூடுதல் பயன்தரக்கூடிய நல்ல இன கறித் தென்னம் பிள்ளைகள் (Hybrid) விற்பனைக்கு உண்டு. மில்க்வைற், யாழ்ப்பாணம். 0510

---

AUDI 80 G L இன 10 ஸ்ரீ வரிசையில் இலண்டனிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்ட மிகவும் நல்ல நிலைமையிலுள்ள கார் விற்பனைக்கு உண்டு தொலைபேசி: 24351, 146, கோவில் வீதி, யாழ்ப்பாணம். 10480

---

இலண்டனில் இருந்து தருவிக்கப்பட்ட புதிய 8 பற்றி ஒரேநேரத்தில் சாச் பண்ணக் கூடிய பற்றி சாச்சர் உண்டு. இராசா டீசல்ஸ், 180, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 10476

---

யாழ்மிளகாய்த்தூள் - திறம் படத்தயாரித்து 50, 100, 200 கிறாம் பைக்கற்றில் விற்பனைக் குண்டுதயாரிப்பாளர், விற்பனையாளர்: எஸ். பி. வேலாயுத பிள்ளை அன்ட் சன்ஸ், செம்பியன் லேன், கொக்குவில். போன்; 24062 (10484)

## சேவை

திருவெம்பாவை - சுலோசனா மகாதேவன் கல்பகம் ராஜ கோபாலன், எஸ். வைதேகி ஆகியோர் பாடியது- திருப்பள்ளியெழுச்சி தருமபுரம் சுவாமிநாதன் பாடியது- TDK கசெற்களில் பதிவுசெய்யப் பட்டது- துர்க்காஸ் சுன்னாகம்-பாரத்சென்ரர், சுகுணா றேடேர்ஸ் (கஸ்தூரியார்வீதி), யாழ்ப்பாணம், ஆகிய இடங்களில் கிடைக்கும். 10526

---

புதிய பழைய படங்கள் வெளிவந்துள்ளன. இன்றே அங்கத்துவம் பெறுங்கள். சிற்றி வீடியோ கிளப், 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 10269

---

எமது ஸ்ரூடியோவில் வாங்கும் கலர் பிலிம் சுருள்களை எம்மிடம் Processing and Printing செய்து 24 படங்களுக்கு மேல் பெற்றுக்கொண்டால் ஒரு கலர்பிலிம் சுருள் இனாமாக வழங்கப்படும். Processing ரூபா 30/-, P. C. Printing ரூபா 6/50. கொழும்பு ஸ்ரூடியோ, யாழ்ப்பாணம். 10509

---

### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் ஏலவிற்பனை

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் பொதுக்களஞ்சியத்திலும், பொதுசன நூல்நிலையத்திலும் முறையே இருக்கும் வெற்றுத் தார்ப்பீப்பாக்கள், வெற்றுப் போத்தல்கள் போன்ற பழைய பொருட்களும், பழைய புதினப் பத்திரிகைகளும் சஞ்சிகைகள் போன்றவைகளும் 16- 12- 83 வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்குப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

சி.வீ.கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்.
01- 12-83 10528

---

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## தேவை

வார இறுதி நாட்களுக்கு வாய்ப்பாட்டு. வயலின் கற்பிக்க பட்டதாரி ஆசிரியை யாழ். நகர் இசைமன்றத்திற்கு தேவை வடஇலங்கை சங்கீத சபையின் ஆசிரியர் பகுதியில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 10529, C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 10529

## வாடகைக்கு

கொடிகாமம் சந்தி கண்டி- யாழ்ப்பாணம் வீதியில்) அமைந்திருக்கும், வியாபாரத்திற்கு தகுந்த தனியார் அறைகள் நான்கு வாடகைக்குண்டு. விபரங்களுக்கு; 17- 12- 83 அன்று நேரில் தொடர்பு கொள்ளவும்: சி.பொன்னையா, கொடிகாமம். 10521

---

மிகப் புதிய தமிழ் சினிமா படங்கள்- வீடியோ- சுமங்கலி, யுகதர்மம், பழிக்குப்பழி, ருசி அடுத்தவாரிசு இன்னும் பல- ''துர்க்காஸ்''. வீடியோ உலகின் முன்னோடிகள், 68, கே. கே. எஸ். வீதி. சுன்னாகம். 10523

---

சி. கனகரத்தினம்
ஜே. பி. யு. எம்.
உதவியாளர்:
கனகரத்தினம்
கேசவன்
ஜே பி. யு. எம்.
சட்டத்தரணிகளும்
பிரசித்த நொத்தாரிசும்.

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

(இல: 84 அ — பிரிவுகள் 524, 532)

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை கிழக்கு, கடைச்சாமி ஒழுங்கையைச் சேர்ந்த காலஞ்சென்ற அப்பையா பேரம்பலம் என்பவரின் மரண சாதனத்தின் சொத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவரி யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணை மேற்கு, கடைச்சாமி ஒழுங்கை, 19-ம் இலக்கத்தைச் சேர்ந்த அப்பையா பேரம்பலம் கைம்பெண் இராசலெட்சுமி மனுதார்.

மரணசாதன நியாயாதிக்கம் } இல. ரி/3687

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக / மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1983 -ம் ஆண்டு மார்கழி மாதம் 16-ந் நாளன்றுமுற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி
கு. குலசிங்கம்
ஒப்பம்
பதிவாளர்

என்னால் வரையப்பட்டது
க. கேசவன்
ஒப்பம்
மனுதாரின் சட்டத்தரணி.

1983 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 3 ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.
10240

### பெயர் மாற்றம்

கல்திட்டிகொக்குவில் மேற்கை சேர்ந்த முருகேசு ஆதிநாராயணேஸ்வரன் ஆகிய நான் எனது பெயரை 13- 12- 83 தொடக்கம் முருகேசு- ரவிசங்கர் என மாற்றி உள்ளேன் என்பதை அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

மு. ரவிசங்கர்
10517

---

ஊர்காவற்றுறை
மாவட்ட நீதிமன்றம்

### முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

காரைநகர் களபூமியைச் சேர்ந்த சண்முகம் முருகேசு பேரம்பலத்தின் மரண சாதன விடயத்தில் இறந்தவர்

வழ. இல: மரணசாதன நியாயாதிக்கப் : ரி/83

சிதம்பரம் கைம்பெண் எஸ். எம். பேரம்பலம் பொன்னுவலை களபூமி காரைநகர்.

மனுதாரி

மேலேயுள்ள இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட மரண மெய்தியவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டுள்ளதெனவும் 1983ம் ஆண்டு கார்த்திகை மாதம் முதலாந் திகதி அதில் அதற்கிணங்க முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1983ம் ஆண்டு கார்த்திகை மாதம் முதலாந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஒப்பம்
நடராசா
பதிவாளர்

வரைதல்:
ஒப்பம்:
செ. மகேசன்
மனுதாரின் சட்டத்தரணி
10473

---

ஊர்காவற்றுறை
மாவட்ட நீதிமன்றம்

### முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

காரைநகர் தங்கோடையைச் சேர்ந்த சின்னத்தம்பி கந்தையாவின் மரணசாதன விடயத்தில் இறந்தவர்

வழ. இல: மரணசாதன நியாயாதிக்கம்: ரி/82

கந்தையா ஜெயசிங்கம் தங்கோடை காரைநகர்.

மனுதார்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட மரண மெய்தியவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டுள்ளதெனவும் 1983ம் ஆண்டு கார்த்திகை மாதம் முதலாந் திகதி அதில் அதற்கிணங்க முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1983ம் ஆண்டு கார்த்திகை மாதம் முதலாந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஒப்பம்
நடராசா
பதிவாளர்.

வரைதல்:
ஒப்பம்
செ. மகேசன்
மனுதாரின்
சட்டத்தரணி 10474

### லட்ச ரூபா செலவில் மாடிக் கட்டிடம்

(புலோலி)

பொலிகண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலைக்கு சுமார் ஒரு லட்சம் ரூபா செலவில் மாடிக்கட்டிடமொன்று நிர்மாணிக்கப்படவுள்ளது. இம் மாடிக்கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டும் விழா பாடசாலை அதிபர் திரு. எஸ். சேவற்கொடியோன் தலைமையில் நடைபெற்றது. முன்னால் உடுப்பிட்டி எம், பி. திரு. த. இராசலிங்கம் கட்டிடத்திற்கான அடிக்கல்லை நாட்டிவைத்தார். (கு)

---

கரைச்சி வடக்கு,
ப. நோ. கூ. சங்கம்,
பரந்தன்

### கேள்வி விண்ணப்பம் வெற்றுச்சாக்குகள்

எமது சங்கத்தில் உள்ள வெற்றுச் சாக்குகளுக்கு கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பம் செய்ய விரும்புபவர்கள் சாக்குகளை நேரில் பார்வையிட்டு, விண்ணப்ப வைப்புப் பணம் ரூபா 110/-(ரூபா 100/- திருப்பி வழங்கப்படும் செலுத்தி, விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று பூரணப்படுத்தி பதிவுத் தபால் மூலம், ''பொதுமுகாமையாளர், கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம் பரந்தன்'' என்ற முகவரிக்கு 20-12-83க்குப் பிந்தாமல் (கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்ப விபரத்தினை எழுதி) அனுப்புதல்வேண்டும்.

பொதுமுகாமையாளர்
கரைச்சி வடக்கு,
ப. நோ. கூ. சங்கம்,
பரந்தன். 10497

### கூட்டுறவுக்கிளையில் திருட்டு

(புலோலி)

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க பெரிய தேவனத்தாய் கிளை இரவு வேளையில் கதவு உடைக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

கதவைஉடைத்துக்கொண்டு உட்புகுந்த கொள்ளையர்கள் புடவை வகைகள், பால்மா வகைகள், பற்றிகள் என்பனவற்றைக் கொள்ளையடித்துக் கொண்டு சென்றுள்ளனர்.

இதுசம்பந்தமாகப் பருத்தித்துறைப் பொலிஸ்நிலையத்தில் புகார்செய்யப்பட்டுள்ளது. பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்

---

### பிறந்த நாள் வாழ்த்து
### செல்வன் சபீத்



திருநெல்வேலி வடக்கு, கலாசாலை வீதியைச் சேர்ந்த சிறிஸ்கந்தராசா ஜெயபாமினி தம்பதிகளின் செல்வப் புதல்வன் சபீத் தனது மூன்றாவது பிறந்த தினத்தை இன்று 13-12-83 தனதில்லத்தில் மகிழ்ச்சியாகக் கொண்டாடுகிறார். இவரைப் பெற்றோர், உற்றார், உறவினர் அனைவரும் சகல செல்வங்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவெனவாழ்த்துகின்றனர்.

10503

---


வேலை செய்வோர், பல்கலைக்கழக மாணவர்கள், மற்றும் அனைவரது வேண்டுகோளுக்கிணங்க

**வார இறுதிப் புதிய பிரிவு**

SPECIAL

**SPOKEN ENGLISH Course**

(6 மாதம்)

**ஆரம்பம்:- 17-12-83 மாலை 3-30**

**ஆசிரியர்:- கே.எஸ்.என். குமரன்**

1. நேர சூசிகை சனி, ஞாயிறு 3-30 — 5-30 (மாலை)
2. அச்சடித்த விளக்கக் குறிப்புகள் இலவசம்.
3. வரையறுக்கப்படாத மணித்தியால விரிவுரைகள்.

விபரங்கட்கு:-
கே. எஸ். என். குமரன்,
402 1/2, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(சிவன்கோவிலடி) 10524



C. E. I. மாணவர்களின் ஏமாற்றத்தைத் தவிர்க்க

**C. E. I.** Part II (1985 May Examination)

**ஆரம்பம்:- 18-12-1983 காலை 9-00**

**C. E. I.** Part I (1984 May Revison)

**ஆரம்பம்:- 17-12-83 காலை 9-00**

1. இலங்கையின் தலைசிறந்த பொறியியலாளர்கள் விரிவுரையாற்றுகிறார்கள்.
2. அச்சடித்த விளக்கக் குறிப்புகள் யாவும் இலவசம்.
3. வேலை செய்வோர், மாணவர்கள் அனைவரது வசதிக்கேற்ப பிரத்தியேக பிரிவுகள்.

விபரங்கட்கு:-
K. S. N. CUMARAN,
402 1/2, K. K. S. ROAD, JAFFNA.
[சிவன்கோவிலடி] 10525

# “அரபாத்படையினரின்பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கமுடியாது!”

## திரிப்பொலி நகரை முற்றுகையிட்டுள்ள இஸ்ரேலிய கடற்படை அறிவிப்பு!

பெய்ரூட், டிச. 12

வடக்கு லெபனானின் திரிப்போலிநகரிலுள்ள யாஸீர் அரபாத்துக்கு விசுவாசமான பாலஸ்தீன விடுதலை இயக்கப் பிரிவினர் அந்நகரை விட்டு வெளியேறத்தயாராகவுள்ளனர். ஆனால் அந்நகரைச் சுற்றிவளைத்துள்ள இஸ்ரேலிய கடற்படை, பாலஸ்தீனஇயக்கத்தினரின் பாதுகாப்பான வெளியேற்றத்துக்கு உத்தரவாதமளிக்க முடியாதென்று தெரிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து திரிப்பொலியிலுள்ள பாலஸ்தீனர்களின் நிலை மிகவும் இக்கட்டாக உள்ளது. இவர்கள்இந்த வாரத்தில் திரிப்பொலியிலிருந்தும் கடல் மார்க்கமாக லெபனானைவிட்டு வெளியேறத் திட்டமிட்டிருந்தனர்.

இஸ்ரேலிய கடற்படை அதன் அரசாங்கம் ரெல்அவிவ்விலிருந்து விடுத்த உத்தரவு ஒன்றின் அடிப்படையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது. இவ்வாறு உத்தரவு பிறப்பித்துள்ள இஸ்ரேலிய அரசு, பாலஸ்தீன விடுதலை இயக்கத்தினரை திரிப்பொலியிலிருந்து வெளியேறச் செய்வதற்கு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமோ அல்லது வேறு எந்த அரசுகளுமோ உதவக்கூடாது என்றும் விண்ணப்பித்துள்ளது.

பாலஸ்தீனர்களை திரிப்பொலியிலிருந்து வெளியேற்றுவதற்கு கிரேக்க, பிரெஞ்சுக் கப்பல்கள் சிலவும் முன்வந்தன. ஆனால் அவை தற்போது தமது பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்கும்படியும், பாலஸ்தீனர்களுடனான கடல்பயணத்தின் போது பாதுகாப்பளிக்கும்படியும் பெய்ரூட்டிலுள்ள ஐ. நா சமாதானப் படையினரைக் கேட்டுள்ளன.

ஆனால் இதுவரை பிரிட்டன், அமெரிக்கா, இத்தாலி, பிரான்ஸ் ஆகியவற்றைச் சேர்ந்த அச்சமாதானப் படையினர் அக்கப்பல்களுக்கு தமது முடிவெதனையும் தெரிவிக்கவில்லை.

கடந்த செவ்வாய்க்கிழமை இஸ்ரேலின் ஜெரூசலம் நகரில் குண்டு வெடிப்பொன்றுநிகழ்ந்தது. அதில் நான்கு பேர்கொல்லப்பட்டனர். 43 பேர் காயமடைந்தனர். இக் குண்டு வெடிப்புக்கு தாமே பொறுப்பென்று பாலஸ்தீன விடுதலை இயக்கத்திலுள்ள யாஸீர் அரபாத் ஆதரவாளர்களும், அவரது அதிருப்தியாளர்களும் உரிமை பாராட்டினர்.

இதனைத் தொடர்ந்தே திரிப்பொலி நகரிலிருந்தும் யாஸீர் அரபாத்தின் படைகளை வெளியேறவிடாது தடுப்பதில் இஸ்ரேலியப்படைகள் மும்மரமாக இருக்கின்றன. (கி)

## ரூபவாஹினியில் இன்று

மாலை:

6-02 ‘லஸி’-நாயொன்றின் தீரச்செயல்கள் (ஆங்கிலம்)

6-30 ‘கலை அரங்கம்’

7-00 செய்திகள் (தமிழ்)

7-14 நாளைய நிகழ்ச்சிகள்.

7-15 விளையாட்டுப் பயிற்சி

7-45 ‘புரொஜெக்ட்’ தரையிறங்கும் விண்வெளி மர்மப் பொருட்கள் பற்றிய கதைச் சித்திரம்.

8-15 செய்திகள் (சிங்களம்)

8-30 ‘புரொஜெக்ட்’ தொடர்ச்சி.

9-00 சமையல் தகவல்கள் (ஆங்கிலம்)

9-15 வெளிநாட்டுச் செய்தி விமர்சனம்.

9-30 செய்திகள் (ஆங்கிலம்)

9-50 ‘ஹவாய் 5 ஓ’ துப்பறியும் சித்திரம்.

10-40 நிகழ்ச்சிகள் முடிவு.

## லயன்ஸ் ஆதரவில் அபிவிருத்தி

(புலோலி)

அல்வாய் வடக்கு குழுதெனிக் கிராமம் பருத்தித்துறை லயன்ஸ் கழகத்தின் ஆதரவுடன் அபிவிருத்தி செய்யப்பட்டுவருகின்றது. இதற்கென வேலைத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இக்கிராமத்தில் அண்மையில் பொது வைத்திய சேவைகள், குழந்தைகளுக்கான தடுப்பு மருந்துகள் ஏற்றும் சேவைகள் என்பன நடைபெற்றன. [கு]

## பல்கலைக்கழக அனுமதி:

# “கல்வித் தகைமைகளின் அடிப்படையில் இருக்க வேண்டும்”!

### தமிழக ஆளுநர் குரானா உரை

சென்னை, டிச. 12

“பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்களை அவர்களின் கல்வித்தகைமைகளின் அடிப்படையிலேயே அனுமதிக்க வேண்டும்” என்று தமிழ்நாடு மாநில ஆளுநர் திரு எல்.எம். குரானா தெரிவித்தார்.

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நேற்று விசேட வைபவமொன்றுநடைபெற்றது. அவ்வைபவத்துக்கு தலைமை தாங்கிப்பேசுகையிலேயே திரு. குரானா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: “பல்கலைக்கழக அனுமதி, தெரிவு ஆகியன மாணவர்களின் கல்வித்திறமையையும். தகைமையையுமே அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். வேறு வகைகளில் அவர்களைபல்கலைக்கழகங்களுக்குத் தெரிவுசெய்யக் கூடாது.

திறமைசாலிகளான வறிய மாணவர்களுக்கும் பல்கலைக் கழக அனுமதியில் முக்கியம் தரப்படவேண்டும். அத்துடன் அவர்களுக்கு உயர் கல்வியைத் தொடர நிதியுதவிகளையும் பல்கலைக்கழகங்கள் வழங்க வேண்டும்” என்றார்.

தமிழக கல்வித்துறைஅமைச்சர் திரு. அரங்கநாயகம் பேசுகையில், மாணவர்கள் தொழில் கல்விப்பயிற்சியில் ஈடுபட வேண்டுமெனவும் இதன் மூலம் அவர்கள் சுயமாகவேலை வாய்ப்புக்களைத் தேடலாமென்றும் தமிழக அரசு தொழில் கல்வியை ஊக்குவிக்க முடிவு செய்திருப்பதாகவும் தெரிவித்தார். (இ)

## டிராக்டரிலிருந்து விழுந்து மரணம்

(யாழ்ப்பாணம்)

பளையைச் சேர்ந்த எஸ். சிவயோகநாதன் என்பவர் டிராக்டரிலிருந்துவிழுந்து ஆபத்தான யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு நேற்று மரணமானார். (க)

## பாகிஸ்தானில்

# லட்சக்கணக்கானவர்கள் போதைவஸ்த்து அடிமைகள்!

இஸ்லாமாபாத், டிச. 12

பாகிஸ்தானில் போதைவஸ்துக்கு அடிமையாகிவருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துவருகிறது. கடந்த ஆண்டிலும் பார்க்க இந்த ஆண்டில் இவ் எண்ணிக்கை ஒரு லட்சமாகக் காணப்படுகிறது.

இத் தகவல்களை பாகிஸ்தானின் போதைவஸ்துத் தடுப்புப் பிரிவு அதிகாரியொருவர் தெரிவித்தார். ஆயிரக்கணக்கானவர்கள் போதைவஸ்து பாவனை, கடத்தல் விற்பனையில் ஈடுபட்டதாகக் கைதாகியுள்ளனரென்றும் அவர் தெரிவித்தார்.

அவ்வதிகாரியின் கருத்துப்படி 13 வயதுக்கும் 30 வயதுக்குமிடைப்பட்டவர்களே போதைவஸ்துக்களுக்கு வேகமாக அடிமைகளாகுகின்றனர் என்று தெரியவந்துள்ளது.

முன்னர் தெரிவிக்கப்பட்ட தகவலொன்றில் பாகிஸ்தானில்தினம் 15 பேர் வரை போதைவஸ்துவுக்கு அடிமையாகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பாகிஸ்தானில் போதைவஸ்துப் பாவனையைத் தடுக்க மரணதண்டனை உட்பட பல கடும் தண்டனைகள் விதிக்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. [கி]

## பொலநறுவாவில்

# இன ஒற்றுமை மகாநாடு; 5000 இளைஞர் பங்குபற்றுவர்

(திருகோணமலை)

இன ஒற்றுமையை வளர்க்கு முகமாக இளைஞர் முகாம் ஒன்றை நடத்த தேசிய இளைஞர்சேவைமன்றம் நடவடிக்கை எடுத்துள்ளது. பொலநறுவையில் 1984ம் ஆண்டின் முற்பகுதியில் இம் முகாம் நடத்தப்படும்.

நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் சகல இனங்களையும் சேர்ந்த ஐயாயிரம் இளைஞர்கள் இம் முகாமில் பங்குபற்றுவர்.

இளைஞர் விவகார, வேலைவாய்ப்புத் துறைப் பிரதி அமைச்சர் திரு. காமினி அத்துக்கோறள மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

திருமலை மாவட்ட இளைஞர் சம்மேளனத்தின் 2-வது ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் பேசுகையிலேயே பிரதிஅமைச்சர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

இதனிடையில் திருமலை மாவட்ட இளைஞர் சம்மேளனமும் திருமலை மாவட்ட இளைஞர் சம்மேளனமும் திருமலை மாவட்டத்தில் 1984ல் இன ஒற்றுமையை வளர்க்கும் இளைஞர் முகாம்களை நடத்த முடிவுசெய்துள்ளன. [ஏ]

## காவலில் வைக்கப்பட்டிருந்த

# முன்னாள் பங்களாதேஷ் அதிபரின் மனைவி விடுதலை!

டாக்கா, டிச. 12

பங்களாதேஷில் கடந்த சில வாரங்களாக சிறைவைக்கப்பட்டிருந்த முன்னாள் பங்களாதேஷ் அதிபர் ஜெனரல் ஸியாவுல் ரஹ்மானின் பாரியார் பேகம் கலிதா ஸியா நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

பங்களாதேஷின் புதிய ஜனாதிபதியாக பிரதம இராணுவச் சட்ட நிர்வாகி ஜெனரல் மொஹமட் எர்ஷாத் நேற்று பதவியேற்றார். இதனைத் தொடர்ந்தே அவர் உடனடியாக பேகம் கலிதா ஸியாவை விடுதலை செய்தார். இவருடன் கைது செய்யப்பட்டிருந்த வேறும் சில அரசியல்கட்சிப் பிரமுகர்களும் நேற்றுவிடுதலை செய்யப்பட்டனர்.

பேகம் கலிதா ஸியாவும், அவரதுசகாக்களும்கடந்தமாத நடுப்பகுதியில் பங்களாதேஷ் இராணுவ ஆட்சிக்கெதிராக ஆர்ப்பாட்டங்கள் சிலவற்றை ஒழுங்கு செய்திருந்தனர். இதனையடுத்தே இவர்கள் டாக்காவில் கைதானார்கள்.

கைது செய்யப்பட்ட சமயம் பேகம் கலிதா ஸியா காயமடைந்தார் என்பதுவும் குறிப்பிடத்தக்கது. இவரது கணவரும் முன்னாள் பங்களாதேஷ் அதிபருமான ஜெனரல் ஸியாவுல் ரஹ்மான் 81ம் ஆண்டு இறுதிப்பகுதியில் சுட்டுக்கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (கி)

## 53 வீடுகள் கையளிக்கப்படும்

(அரியாலை)

அரியாலை கிழக்கில் பூம்புகார் குடியேற்றத்திட்டத்திற்கு அண்மையில் சுய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட 53 வீடுகள் உரிமையாளர்களுக்கு கையளிக்கப்படவுள்ளது.

## “தமிழ் மக்களின் உரிமைகளுக்கு சேதம் ஏற்படக் கூடாது!”

### வங்கி ஊழியர்சங்க கூட்டத்தில் தீர்மானம்

[கொழும்பு]

“தமிழ் மக்களின் உண்மையான தேவைகளை அறிந்து அவர்களது கோரிக்கைகளுக்குச் செவிசாய்த்து, ஜனநாயக உரிமைகளுக்கு எவ்வித சேதமும் ஏற்படாவண்ணம் நடவடிக்கை எடுப்பதே தற்போதைய பிரச்னைக்கு நிரந்தர நிச்சயமான நிவாரணமாகும்.”

எனக்கோரும் பிரேரணை ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை குருநாகல் நகர மண்டபத்தில் நடைபெற்ற இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

திரு. பி. பண்டார என்பவரால் பிரேரிக்கப்பட்டு திரு. எட்வேட் பெரேராவால் இப் பிரேரணையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

“அண்மைக்கால வரலாறு காணாதவகையில் கீழ்த்தரமான இனவாதம் என்றபோர்வையில் நாடெங்கிழுலுள்ள தமிழ் மக்களைக் கொன்றும், வதைத்தும் சொத்துக்களை அழித்தும் பொதுமக்களின் அன்றாடசீவியத்துக்கு இடைஞ்சல் ஏற்படுத்தியும் இடம்பெற்றஅட்டூழியங்கள் குறித்து மிகவும் வேதனைப்படும் நாம், அவற்றை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

(7ம் பக்கம் பார்க்க)

## மணிவாக்கு

பெரிய மனம் படைத்தவர்கள் பூக்களைப்போன்றவர்கள். ஒன்றில் அவர்கள் மற்றவர்களின் தலையில் இருப்பார்கள். அன்றேல் தம்பாட்டில் வாடி உதிர்ந்து விடுவார்கள்.

— அமரநீதிகள்

# நமது நோக்கு

## காரியசித்திக்கு கயிற்றில் நடத்தல்

கயிறு விடுதல் வேறு; கயிற்றில் நடத்தல் வேறு; முந்தியது ஏமாற்றும் வித்தையைக்குறிக்கிறது. பிந்தியது நெருக்கடியான நிலையில் சாதுர்யமாக முன்னேறும் திறமையைக் குறிக்கிறது.

அரசியலில் இரண்டும் இடம்பெறுவது இயற்கை; கயிறுவிடுதல் இலகுவானது; குறுகிய லாபத்தை அடைய உதவும்; தூரப் பார்வையில் தோல்வியே அதன் விளைவு. கயிற்றில் நடக்கும் தேர்ச்சியுடைய தலைவன் பெரு நெருக்கடியில் சமத்துவமான பாதை ஒன்றைக் கண்டுபிடிக்கும் வல்லவனுகின்றான்.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தில் பல தலைவர்கள், முடிவுகாண முயன்றனர்; பேச்சுவார்த்தைகள் நடத்தினர். கைக்கெட்டியது வாய்க்கெட்டும்போது எழுதப்பட்ட ஒப்பந்தங்கள்கிழித் தெறியப்பட்டன.

ஒருதலைப்பட்ட ஏமாற்றம் என்று சொல்வதும் தவறு; நியாயமான தீர்வு என்று இன்று கணிக்கப்படும் ஒப்பந்தம் ஒன்றை, நேர்மாறான காரணங்கள் காட்டி, சிங்களத் தலைவர்களும் தமிழ்த் தலைவர்களும் எதிர்த்ததும் ஒப்பந்தம் கிழிபட்டபோது, அன்று ஆட்சிக்கெதிரான கட்சிகள் (சிங்களம், தமிழ்) அது தமக்குவெற்றியென்று தம்பட்டம்அடித்ததும் இந்த தூர காலத்தில் விபரீதமாகத் தோன்றும்.

எனவே இந்தப் பிரச்னை காலத்தால் வளர்ந்த கதை. இன்று இந்த அபாய நிலைக்கு வந்துவிட்டதை அகில உலகும் அறியவைக்கும் சம்பவங்கள் விளக்குகின்றன; உலகின் கண் இலங்கையிலே; இலங்கையின் கண் இந்தியாவில்.

சிங்கள - தமிழ் மக்கள் தத்தம் சிந்தனைகளைத் தெளிவுபடுத்த இயலாத சூழ்நிலைக்கு கடந்த காலத்தில் இவ்வித அரசியல் கயிறு விடுதல் பெரிதும் உதவியிருக்கிறது.

தேசிய ஒற்றுமைக்கு இரு சமூகத்தவரும் ஒருவர் மொழியை மற்றவர் படித்திருப்பது நல்லதென்ற இயக்கம் அரும்ப முந்தியே, அதனை முளையோடு கிள்ளிய தலைவர்கள் இரு பக்கத்திலும் இருந்தனர்; ஒரு இனம்-உதாரணமாகத் தமிழர் சிங்களம் படித்தாலும் சிங்கள மாணவர் ஒருபோதும் தமிழ் படிக்கமாட்டார்களென்ற கருத்து வலுவடைந்தது; அதில்உண்மையில்லாமலில்லை; ஆனல் சுமார் முப்பதுவருட அனுபவத்தின் பின் இந்தக்கசப்பான உண்மை இன்றுபுதிதாகப் பேசப்படுகிறது; அது தவிர்க்க முடியாத மருந்தென்றும் நம்பப்படுகிறது.

அரசியலில் கயிறுவிடுதல் தற்காலிக வெற்றியளித்தபோதும் அது ஒரு சமூகத்தின், நாட்டின் நிரந்தர முன்னேற்றத்துக்கு உதவாதென்ற நிலையில் இலங்கை அரசியல் படம் உலகநோக்கில் காட்சியளிக்கிறது.

கடந்தவார முடிவில் நடைபெற்ற ஐ. தே. கட்சி மாநாட்டில் கட்சிப்பிரமுகர்கள் நிகழ்த்திய பேருரைகள் இதனைச் சாதுர்யமாக வெளிப்படுத்துகின்றன.

கட்சித்தலைவர் ஜனதிபதி ஜெயவர்த்தன, 35 வருட சுதந்திர ஆட்சியின் வரலாற்றைக் கரைத்துக் குடித்த அனுபவசாலியென்பதை யார் மறுப்பார்?

இப்பழம் பெரும் பிரச்னை சிக்கலான ஒவ்வொரு கட்டத்திலும் பெரும்பங்கெடுத்தவர். ஐ. தே கட்சியின் 20 வருட ஆட்சியிலும் அவருடைய செல்வாக்கு வளர்ந்து இன்று ஜனதிபதியாக அவர் ஒருவீரச்செயலை ஆற்றவல்ல சந்தர்ப்பத்தை எதிர்நோக்குகிறார்.

தமிழர் பிரச்னையை நியாயமாகத் தீர்க்கும் மனத் துணிவு இன்று அவரில் பிரத்தியட்சமாகி விட்டது. மக்கள் (சிங்கள) ஆதரவைத் திரட்ட, சர்வகட்சி மாநாட்டில் ஒரு ஒற்றுமைப்பட்ட முடிவை எடுக்க, கயிற்றில் நடக்கிறார்! கயிறு மிக இறுக்கமாக இழைக்கப்பட்ட கயிறு.

அந்த ஆற்றல் மிக்கசெயலுக்கு அவசியமான குடை அவருடைய இந்திய விஜயத்தில் கிடைத்ததென்று கருதுவது தவறல்ல.

இந்தியாவைப் பற்றிய அச்சம் நீங்கி இந்திராவின் உதவி - பார்த்தசாரதியின் சாரதித்திறமை- நாட்டுக்கு (இலங்கை) ஒரு வரப்பிரசாதம் என்ற நம்பிக்கை எழுந்திருக்கிறது; அவருடைய சகாக்களை அது தொற்றியிருக்கிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணியை ஏசியும், சிங்கள மக்களின் ஆதரவே முக்கியமென்றும் நாட்டின் சர்வதேச விவகாரங்களுக்கு இந்தியாவின் நட்பு இன்றியமையாததென்றும், தமிழர் பிரச்னையால் எழுந்த அழிவுகள் நாட்டின் முன்னேற்றத்துக்கும் நற்பெயருக்கும் களங்கம் விளைவித்தனவென்றும் மிகச்சாதுர்யமாக தாளம் பிழைக்காத தொனியில் நிரந்தர விடிவு தேட இம்முறை காரியசித்தியில் சித்தம் கொண்டுள்ளது தெளிவு.

## வீதியில் வெள்ளம்!

[கரவெட்டி)

நெல்லியடியிலிருந்து பண்டித்தலைக்குச் செல்லும் மஹாத்மாவீதி தற்பொழுது பெய்யும் மழையினையடுத்து வெள்ளம் தேங்கியுள்ளது. இதனல் இப்பகுதி மக்கள் பெரும் சிரமத்துக்குள்ளாகியுள்ளனர்.

## புரியவேண்டிய உண்மைகள்

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுசெயலாளர் திரு. என். சண்முகதாசன் அவர்கள், தற்போதைய வட பகுதி நிலவரம் தொடர்பாக தெரிவித்த கருத்துக்கள் பலவற்றையும் மறுதலிக்கும்வகையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. வீ. ஆர். லிங்கன் அவர்கள் விமர்சித்திருந்தமை தொடர்பாகச் சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

முதலாவதாக, தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் இந்தியாவில் புகலிடம் தேடியுள்ளதை திரு. சண்முகதாசன் குறிப்பிட்டது தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களை மாசுபடுத்தும் விதத்தில் அமைந்துள்ளதாகவும் அவர்கள் சுகபோக வாழ்வுக்காக அங்கு சென்றுள்ளார்கள் என்ற கருத்துடன் குறிப்பிடுவதாகவும் ஆதங்கப்பட்டிருக்கின்றார்.

த. வி. கூ. தலைவர்கள் இந்தியாவில் தங்கியிருந்து இலங்கை வாழ் தமிழ் மக்களினல் எதிர்நோக்கப்படும் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண முயற்சிக்கின்றார்கள் என்பது உண்மைதான், அதில் சந்தேகப்பட என்ன இருக்கின்றது? ஆனல், த. வி. கூ. தலைவர்கள் இன்று தங்கள் மண்ணில் இருக்கமுடியாமல் இந்தியா சென்று புகலிடம் தேடி, இலங்கை மண்ணின் எல்லைக்குள்ளேயே முற்றுமுழுதாகத் தீர்க்கப்படவேண்டிய பிரச்னைகட்குத் தீர்வுகாண இந்தியாவில் முயற்சிக்கும் அளவுக்கு அவர்களைத் தனிமைப்படுத்தியது யார்?

வேறு யாருமல்ல, அவர்களே தான்!

தமிழ் மக்களின் நீதியான கோரிக்கைகளுக்கு ஆதரவு தரும், தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேச இறைமையை ஏற்றுக்கொண்டுள்ள பிரிவினைக்கு எதிரான முற்போக்குச் சக்திகளின் வேண்டுகோளின்பேரில் 'தனி நாடு' கோரிக்கையைக் கைவிடாதவர்கள். தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேச இறைமையைக்கூட ஒப்புக்கொள்ளாதவர்களின் பலவந்தத்தின் பேரில் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டு சமாதானத் தீர்வுகாண விளைகின்றமை நேர்மையுள்ளம் படைத்த, ஆரோக்கியமான அரசியல் சிந்தனையைப் புரிந்து கொள்ளக்கூடியவர்களுக்கு விளங்கும். அத்துடன் இந்தியாவில் தலைவர்களின் பத்திரிகை அறிக்கைகளைப் பெரிதுபடுத்தி அவர்கட்கு 'பெருமை' சேர்க்கிறார் திரு லிங்கன்.

# மக்கள் கருத்து

முதலாவதாக யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகம் இல்லையே என சண்முகதாசன் அங்கலாய்க்கிறார் என லிங்கன் குறிப்பிடுகிறார் சிவில் நிர்வாகம் ஒன்று யாழ்ப்பாணத்தில் இயங்க வேண்டுமென்ற ஆதங்கத்தினல் அல்ல, வடபகுதி நாட்டின் மற்றய பகுதிகளைவிட வித்தியாசமான ஒருமுறையில் இயங்குகின்றது என்பதைத் தெளிவுபடுத்தவே அவர் அவ்வாறு குறிப்பிட்டார் என நான் எண்ணுகின்றேன்.

யாழ்ப்பாணத்தில் அரசியலும் சிந்தனையும் தீவிரவாத இளைஞர்களின் கைகளில்தான் இன்று உள்ளது என்பது முற்

(5-ம் பக்கம் பார்க்க)

# குருமாற்றம்

## உங்களுக்கு எப்படி?

### மிதுனம்:

மிதுன ராசி நேயர்களுக்கு குருபகவான் 7ம் இடமாகிய தனு ராசியில் பவனி வருவார். திருமணம் ஆகாதவர்களுக்கு இனி திருமணப்பேறு உண்டு. குடும்பவாழ்க்கையில் நல்லுறவு ஏற்பட்டு மகிழ்ச்சி ததும்பும். இதுவரை இருந்து வந்த எதிரிகள் தொல்லைநீங்கி, அவர்களே ஆதரவு நல்கும் அளவுக்கு நிலைமை சீராகும். அலைச்சல்களும், மனச்சஞ்சலங்களும் நீங்கி பெருமளவு நிம்மதி கிடைக்கும். அரசாங்க ஆதரவு, பொதுமக்களின் நன்மதிப்பு, தொழிலில் பதவிஉயர்வு, வருமானம் அதிகரித்தல், பெரியோர்கள் சந்திப்பும் நன்மையும், பூமி சேருதல், புத்திரப்பேறு, புத்திரரால் சிறப்பு, மன உற்சாகம், ஆரோக்கியம், அபிவிருத்தி, புண்ணிய ஸ்தல, தீர்த்த யாத்திரை, தெய்வ அனுக்கிரகம் என்பனவெல்லாம் கைகூடும். உத்தியோகத்துறையில் மேலதிகாரிகளின் நன்மதிப்பு, அன்பு கிட்டும். கடமையில் உற்சாகம் காணப்படும். பதவிஉயர்வும், சம்பளஉயர்வும் உண்டு. இந்தஇராசியில் உள்ளோருக்கு எந்நேரமும் அஷ்டஇலட்சுமி கடாட்சம் கிட்டும். மாணவர்கட்கு கல்வியில் மேம்பாடு, பரீட்சைகளில் சித்தி, நல்ல ஞாபக சக்தி, உயர்கல்வி, ஆகிய நன்மைகள் உண்டு. விளையாட்டுத்துறையில் வீரர்களாகத் திகழ்வர். இவர்களை ஆசிரியர்கள் பெற்றோர்கள், பொதுமக்கள் மெச்சுவார்கள். பெண்மணிகளுக்கு குடும்ப வாழ்வில் நிம்மதியும், மகிழ்ச்சியும், சீரும் சிறப்பும் சிறந்து ஓங்கும். கமக்காரர்களுக்கு விவசாயத்தில் லாபம், புதிய பூமி வாங்குதல் புதியவிதமான பயிர்ச்செய்கை, நல்ல முன்னேற்றம், இலட்சுமி கடாட்சம் ஆகிய சிறப்புகள் உண்டு.

சி. நவரத்தினம்

(ஆனைக்கோட்டை)

### கர்க்கடகம்

கர்க்கடக ராசி நேயர்களுக்கு சத்துரு ஸ்தானமான 6ம் இடத்தில் வியாழன் வந்து தங்கியிருப்பார். அரசாங்க வழிகளிலும், உற்றார் உறவினர்களாலும் விரோதங்கள், தொல்லைகள் ஏற்படும். வியாசியம் போன்றவற்றினலே பயம் உண்டாகலாம். ''ஆறில் குரு, ஊரில் பகை'' எனப்படும். பொருளாதாரம் மந்தநிலை, மனைவி மக்களின் ஆரோக்கியம் குறைந்து அதனல் எந்நேரமும் வைத்தியச் செலவுகள் அதிகரிக்கும். நம்பி இருந்தவர்கள் மோசடிசெய்ய முனைவர். தேச சஞ்சாரமும் அந்நியநாடுகளில் தொழில் பார்ப்போர் மானபங்கமடையக்கூடிய சம்பவங்களும் நடக்கும். உத்தியோகத்தர்கள் தொழில் ஸ்தானங்களில் சஞ்சலம் ஏற்படுவதினலே தொழிலைவிட்டு ஏகுதல், மேலிடத்து வெறுப்பைச் சம்பாதித்தல், எங்கும் விரோதமான சூழ்நிலைகள் போன்றன நிலவும். குருபகவானுக்கு முல்லைப் புஷ்பத்தினல், மஞ்சட் புஷ்பத்தினல் வியாழக்

[5ம் பக்கம் பார்க்க]

## ஏன் இந்த அசமந்தம்?

யாழ். அரச வைத்தியசாலை வெளிநோயாளர் பகுதியில் அமைந்திருக்கும் பிறப்பு இறப்புப் பதிவாளர் காரியாலயத்தில் 28-10-83 அன்று கொடுத்திருந்த விண்ணப்பம் ஒன்றுக்கு இன்றுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. நோய் வாய்ப்பட்டிருக்கும் எனது சகோதரிக்கு அவரின் கணவனுக்குரிய ஓய்வூதியத்தைப் பெறுவதற்காகவே இந்த அத்தாட்சிப் பத்திரம் தேவையாகியுள்ளது. இந்தப்பத்திரத்தைப் பெறுவதற்குத் தேவையான முத்திரைகளையும் கடித உறைகளையும் பதிவாளர் கேட்டுக்கொண்டதன் பேரில் எந்த ஒரு தவறுகளையும் காரணம் காட்டி விண்ணப்பத்தை தாமதம் பண்ணுவதற்கு இடம் வைக்காமல கொடுத்திருந்தேன்- ஒரு கிழமையில் எங்களுக்கு வந்து சேரும் எனவும் அங்கு வந்து விசாரிக்கத் தேவையில்லையென்றும் பதிவாளர் அறிவுறுத்திருந்தார்.

இரண்டு கிழமைகள் சென்றுவிட்டன. மீண்டும்வந்து விசாரித்தேன். தங்களுக்கு வேலை அதிகம் எனவும் உடனடியாக அவை செய்துதரமுடியவில்லையெனவும் மீண்டும் ஒரு கிழமையில் தருவதாகவும் சொல்லி அனுப்பினர்கள்.

மீண்டும் ஏமாற்றம்- அடுத்த கிழமையும் யாழ். அரச வைத்தியசாலைக்கு வந்தேன்- விசாரித்தேன்-

மீண்டும் புதிதான ஒரு வேலைபோல், விண்ணப்பம் எங்கே இருக்கிறது என்று பைல்களைத் தேடினர்கள்- ஈற்றில் கண்டு பிடித்தார்கள்- இருதினங்களின் பின் நேரே வரும்படியும் கட்டாயம் எடுத்துக் கொள்ளலாம் எனவும் பதிவாளரும் அவரின் உதவியாளர்களும் சொன்னர்கள். நான் நான்கு தினங்கள் கழித்து வந்தேன். பதிவாளர் உதவியாளரைப்பார்க்க, உதவியாளர் பதிவாளரைப் பார்க்க பின்னர் அடி லாச்சி ஒன்றினுள் இருந்து ஒரு 'பைல்' உதவியாளரால் எடுக்கப்பட்டது. அதற்குள் இரண்டு விண்ணப்பங்கள் இருந்தன. ஆனல் அவையோ வேறு பெயர்கள் கொண்டவை. மீண்டும் ஒரு கட்டாக வேறுஒரு பைல் எடுக்கப்பட்டு எனது விண்ணப்பம் கண்டுபிடிக்கப்பட்டது.

ஊருக்குத் திரும்பினேன். தவணை முடிந்து மீண்டும் திரும்பினேன். சனிக்கிழமை நேரில் வந்து எடுத்துச் செல்லலாம் என்று பதிவாளர் கூறினர்.

சனிவந்தால் கிடைக்காது என்று தெரிந்தநான் அடுத்த செவ்வாய்கிழமை வந்தேன்.

அன்று பகல் 12-45 க்கு சென்று கதவைத் தட்டினேன் முதலில் இரண்டு மணிவரை பகல் உணவு வேளை என்றார் உதவியாளர். நான் எனது விண்ணப்பம் தயாரா என்று மட்டும், தயவுசெய்து சொல்லுங்கள் இதைத் தெரிவதற்கு இரண்டு மணிவரை இங்கு காத்திருக்க வேண்டுமா என்று கேட்டேன்,

''இன்னும் எழுதப்படவில்லை- நாளை வாருங்கள்'' என்று பதில் கிடைத்தது.

நாளை வந்தால் இதுகிடைக்குமா?

ஒரு தடவை கதிரிப்பாயில் இருந்து யாழ்ப்பாணம் வந்து திரும்ப ரூ. 9-50 சதம். இன்னும் எத்தனை ரூ. 9-50 சதங்கள் செலவழிக்க வேண்டுமோ?

என்னைப் போல், பிறப்பு இறப்பு அத்தாட்சிப் பத்திரங்களுக்கு இன்னும் எத்தனை நூற்றுக் கணக்கானவர்கள் இவ்வாறு அவதிப்படுகிறார்களோ?

கே. எஸ். ரி. நமசிவாயம்

அச்சுவேலி

# ‘தமிழ்பொலிசார் இடமாற்றம் நல்லுறவைப் பாதிக்கும்’’

(நல்லூர்)

‘‘யாழ்ப்பாண மாவட்டத்தில் பொலிஸ் நிலையங்களில் கடமைபுரியும் பெருந்தொகையான தமிழ் பொலிசாரை வெளிமாவட்டங்களுக்கு மாற்றஞ் செய்யும் நடவடிக்கை இன்று பொலிசாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே நிலவத்தொடங்கி உள்ள சுமுக உறவுக்குக் குந்தகம் விளைவிக்கும்.’’

யாழ்ப்பாணப் பிராந்தியப் பொலிஸ்-பொதுமக்கள் நல்லுறவுக்குழு இவ்விடமாற்றத்தினைக் கண்டித்து வெளியிட்டு உள்ள மகஜரில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. இம்மகஜர் பொலிஸ் மாஅதிபர் ருத்ரா இராசசிங்கத்துக்கும், பாதுகாப்பு அமைச்சுக்கும் அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது.

யாழ். மாவட்ட பொலிஸ்-பொது மக்கள் நல்லுறவுக் குழுச் செயலாளர் ஏ வி. ஸ்டானிலோஸ், யாழ்ப்பாண அண்ணா தி மு. க. தலைவர் பொன். மதிமுகராசா, முன்னாள் மாநகரசபை உறுப்பினர் ஜனாப் எம். எம். சுல்தான் ஆகியோர் கைச்சாத்து இட்டு அனுப்பியுள்ள மகஜரில் மேலும் கூறப்படுவதாவது:-

யாழ்ப்பாணத்திலிருந்து மாற்றலாகும் தமிழ் பொலிசாருக்குப் பதிலாகக் கடமை ஏற்கப் போதியளவு தமிழ் பொலிசார் வெளி மாவட்டங்களில் இருக்கமாட்டார்கள் என்று அறிகிறோம். இந்நிலையில் சிங்களப் பொலிசார் இவ்வெற்றிடங்களுக்கு மாற்றப் படுவார்கள். தமிழ் பேச, எழுதத்தெரியாத சிங்களப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் யாழ்ப்பாணத்தில் கடமை ஏற்றால், பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவில் மொழி புரியாத காரணத்தால் ஒரு விரிசல் ஏற்படும். தற்போது நிலவத்தொடங்கியுள்ள நல்லுறவு நலிவுறும். இதுவிரும்பத்தக்கதன்று. கருத்துப் பரிவர்த்தனைக்குத் தடை உண்டாகும்.

இங்கிருந்து மாற்றலாகும் தமிழ் பொலிசாரின் வெற்றிடங்களுக்குத் தமிழ் பொலிசார் வெளிமாவட்டங்களில் இருந்து கிடைக்காதவிடத்து இம்மாற்றங்களை ஒத்திப்போடுமாறு இம்மகஜரில் வலியுத்தப்பட்டு உள்ளது.

## ‘‘சர்வோதய இயக்கத்தை ஏன் ஆரம்பித்தோம்’’

(பண்டத்தரிப்பு)

‘‘எமது கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை அதிகரிக்கவும் கிராமத்தை முன்னேற்றவுமே சர்வோதய இயக்கத்தை நாம் சில்லாலையில் ஆரம்பித்தோம். தற்போது நிறுவப்பட்டுள்ள சர்வோதய விற்பனை நிலையத்தின் மூலம் சிலருக்கு வேலை வாய்ப்புகள் கிடைப்பதுடன் பொருட்களை நியாயமான சகாய விலையில் பெற்றுக் கொள்ளவும்வகை செய்கிறது.

இவ்வாறு சில்லாலை சர்வோதய இயக்கத் தலைவி திருமதி பேளி அத்தனாசியார் சில்லாலையில் சர்வோதய இயக்க விற்பனை நிலையத் திறப்பு விழாவிற்கு தலைமை வகித்து பேசுகையில் குறிப்பிட்டார்.

## ஆபாசப்படம் காட்டியவருக்கு 1000 ரூபா அபராதமும் ஒருவாரச் சிறையும்!

(திருகோணமலை)

ஆபாசப்படம் காட்டியதாக மீராமுகைதீன் உமர் ஜலிபர் என்பவர் மீது திருகோணமலைப் பொலிஸார் தொடர்ந்த வழக்கில் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

திருகோணமலை நீதவான் திரு. சரத் டீ ஆப்ரு எதிரிக்கு 1000 ரூபா அபராதமும் 1 வாரச்சிறைத் தண்டனையும் விதித்துத்தீர்ப்பளித்தார்.

‘‘இப்படியான குற்றத்திற்கு டெலிவிஷன் வீடியோ ரெக்காடர் முதலியவற்றைப் பறிமுதல் செய்ய வேண்டும் இது முதல் குற்றமாகையால் அதனைச் செய்ய விரும்பவில்லை. அதன் காரணமாகவே தான் அபராதத்துடன் 1 வாரச் சிறைத்தண்டனையும் விதிக்கின்றேன் என்று நீதவான் தெரிவித்தார். (க)

## படம்பார்த்த 34 பேருக்கு அபராதம்

(திருகோணமலை)

ஆபாசப்படம் பார்த்தவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது. அபராதத்தைச் செலுத்தத் தவறினால் தலா 2 வாரக்கடூழியச் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று திருகோணமலை பதில் நீதவான் திரு. எம். கே.செல்வராசா உத்தரவிட்டார்.

ஆபாசப்படம் பார்த்ததாக 34 பேர் மீது திருகோணமலைப் பொலிஸாரால் குற்றஞ்சாட்டி தொடரப்பட்ட வழக்கு திருமலை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

34 எதிரிகளில் 30 பேர் நீதிமன்றத்தில் சமுகமளித்திருந்தனர். சமுகம் தராத எதிரிகள் நான்கு பேர் மீதும் பதில் நீதவான் வாரண்ட் பிறப்பித்தார்.

சமுகமளித்த 30 எதிரிகளும் குற்றத்தை ஒப்புக் கொண்டனர். ஆபாசப்படம் பார்ப்பவர்களுக்கு ஒரு உதாரணமாக இருக்க எதிரிகளுக்கு கடும் தண்டனை விதிக்க வேண்டும் என்று பொலிஸ் சார்ஜண்ட் தணிகாசலம்பிள்ளை நீதவானிடம் விண்ணப்பித்தார்.

எதிரிதரப்புச் சட்டத்தரணி திரு. வ. இ. சச்சிதானந்தம் ‘‘எதிரிகள் முதல் தடவையாக இக்குற்றத்தைப் புரிந்துள்ளார்கள் என்றும் திரையிடப்பட்ட ஆபாசப்படத்தை எதிரிகளுடன் சேர்ந்து பொலிஸாரும் அரைமணித்தியாலயமாக பார்த்துவிட்டே எதிரிகளைக் கைது செய்தனர் என்றும் தெரிவித்தார்

‘‘ஆபாசப்படம் காண்பிப்பவர்களுக்கு தூண்டுதல் அளிப்பவர்கள் படத்தை பார்ப்பவர்களே என்றும் மனதைக் கெடுக்கும் ஆபாசப்படம் இளம்சந்ததியினரைக்கெடுத்து விடும்’’ என்று பதில் நீதவான் எதிரிகளை எச்சரிக்கை செய்தார்.

## புரியவேண்.....

(4ம் பக்கத் தொடர்ச்சி)

றிலும் உண்மைதான். நான் திரு. லிங்கனிடம் ஒன்றை அறிய விரும்புகிறேன். இன்று வடபகுதியிலுள்ள மக்களைப் பிரதிநிதிப்படுத்துபவர்கள் யார்?

தமிழ் மக்களின் பிரச்னைகள் சர்வதேசமயப் படுத்தப் படவும், இப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டிய ஒன்று என தீர்க்க விருப்பமில்லாத தரப்பாராலும் கூட உணரப்பட்டது. தீவிரவாத இளைஞர்களின் நடவடிக்கைகளால்தான் இத அரசியலில் அங்கம் வகிக்கும் அமைச்சர் தொண்டமானே ஏற்றுக் கொள்கையில், த. வி. கூ தலைவர்களை வீரர்களாகக் காட்ட முற்படும் லிங்கன் ஏன் ஒத்துக் கொள்ள மறுக்கிறார் எனப் புரியவில்லை.

‘இராணுவத்தைச் சீண்டினால் அவர்கள் விடுவார்களா? என்ற அவரின் கூற்று அவருக்குள்ள அரசியல் அறிவின் பரிணாமத்தை தெளிவுபடுத்துகின்றது. அடக்கு முறைக்கெதிராக போராட்டம் நடத்த வேண்டுமெனில் யாருக்கெதிராகப் போராட வேண்டும் என்ற இந்தச் சிறிய உண்மையைக் கூடப் புரிய முடியாதவர் இந்த லிங்கன். ஏனெனில் அவர் ‘சீண்டப்படுவர்களின்’ அநியாயத்தை நியாயப் படுத்தினால் கூட ஆச்சரியப் படுவதற்கில்லை எதிர்காலத்தில்!

தீவிரவாத இளைஞர்கள் திறந்த மனதுடையவர்களாகவும் இடதுசாரி தத்துவங்களைப் பிரதி பலிக்கிறார்கள் எனவும் சண்முகதாசன் குறிப்பிட்டது, இளைஞர்களின் ‘தேசிய இனப்பிரச்சினை சம்பந்தமான சமீபத்திய முற்போக்கான அணுகு முறைகளைத் தெளிவாகப் புரிந்து கொண்டதன் வெளிப்பாடு தான் என நான் எண்ணுகின்றேன். அவ்வாறான முற்போக்கு அம்சங்கள் துல்லியமான பிரச்சினைகளை புரியமுடியாத லிங்கன் போன்றவர்கள் இடதுசாரித்துவம்’ பற்றி எதை அறியப் போகின்றார்கள்.

சண்முகதாசன் போன்றவர்கள் 10 நாட்கள் அல்ல 10 வருடங்கள் யாழ்ப்பாணத்தில் இருந்தாலும் யாழ்ப்பாணத்தைப் புரிய மாட்டார்கள் என்னும் கூற்றுப் பற்றி பின்வரும் விளக்கத்தைக் கொடுத்து என் கடிதத்தை முடிக்க விரும்புகின்றேன்.

திரு. சண்முகதாசன் யாழ்ப்பாணத்தை மட்டுமல்ல முழு இலங்கையை மட்டுமல்ல சர்வதேச அரசியல் நிலைவரங்களைப் புரிந்து கொண்டு சரியான மார்க்ஸிஸ லெனினிஸ வழியில் தூய்மையான வகுப்பு வாத பிறழ்வுகளால் தழம்பாத வழிவிலகாத புரட்சிகர இயக்கம் ஒன்றைத் தலைமை தாங்கிவழிநடத்துபவர். இடதுசாரி இயக்கத்தை 60 ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் பிழையான வழியில் இருந்து திருப்பி புரட்சிகர வழியில் முன்னெடுக்கிச் செல்ல வழி வகுத்து அகில இலங்கை ரீதியில் இயங்கியவர். தமிழ் மக்களினது பிரச்சினைகளை மட்டுமல்ல, சிங்கள-முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் கூட ஆயுதப் போராட்டத்தின் மூலம் பாட்டாளி மக்கள் ஆட்சியில் தீர்க்கப்பட முடியும் என்ற கருத்தை முன்வைத்தவர்.

சிங்கள-பௌத்த வெறியை, மேலாதிக்கத்தை பேரினவாதத்தை வட இலங்கையில் ஒரு மூலையில் இருந்து அல்ல, வகுப்புவாதத் தீ கொளுந்து விட்டெரியும் தென்னிலங்கையில் இருந்து கொண்டு தீரத்துடன் எதிர்த்துப் போராடுபவர் திரு சண்முகதாசன் என்பதை திரு. லிங்கன் ஒப்புக் கொள்வாரென நம்புகின்றேன்.

வீ. பாலன்

## குருமாற்றம்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கிழமைகளில் அர்ச்சனை செய்து கசிந்துருகி வழிபட்டு வர சாந்தியாகும் மாணவர்களுக்கு சோதனைகளில் சித்திக்குறைவு, ஞாபகசக்தி குறைதல் ஆகியன இருக்கும். வியாபாரிகளுக்கு எந்தவிதமான புதிய தொழிலைச் செய்தாலும் நட்டத்தில் முடிதல் வியாச்சியங்களால் பயம், சினேகிதர்கள் பகை, கொடுத்த கடன்களைத் திரும்ப வசூலிக்கமுடியாத கவலை என்பன உண்டாகும் மனஉறுதிவேண்டும். பெண்மணிகளுக்கு குடும்பத்தில்சச்சரவும், குடும்பத்தை விட்டுப்பிரிதல். உடல்நலம் பாதித்தல் என்பன உண்டாகும். என்ன கஷ்டங்கள் வந்தாலும், வருமானம் குன்றினாலும் பெண்கள் வஞ்சகர்களின் துர்ப்புத்தியைக் கேட்டு கணவனைத் தூற்றாமல் மனதை ஒரே வழிப்படுத்தி இன்பதுன்பங்களைச் சமமாக நினைத்து, கஷ்டங்களில் பங்குகொண்டு குடும்பத்தில் ஒற்றுமையுடன் வாழ்வதே மிக மேலானது கமக்காரர்களுக்கு பயிர்ச் செய்கை உரிய காலத்தில் பயன்தராது போதல், இடையூறுகள் வந்து சந்தித்தல், கடன்படுதல் என்பன உண்டாம். இந்த ராசி நேயர்கள் பின்வரும் ‘குரு தோத்திரத்தை’ தினமும்படித்துவருக.

‘‘மறைமிகு கலைநூல்
வல்லோன் வானவர்க்கரசன்
மந்திரி நறைசொரி கற்ப
கப்பொன் னாட்டினுக்
கதிபனாகி நிறைதனஞ்
சிவிகை மன்னணி வீடுபோ
கத்தை நல்கு மிறையவன்
குரு வியாழ னிருமலர்ப்
பாதம் போற்றி’’.

### சிங்கம்

சிங்க ராசிக்காரருக்கு குரு பகவான் 5ம் இடமாகிய தனுவில் சஞ்சரிப்பார். ஐந்தாம் வீட்டை புத்திர ஸ்தானம், முன்ஜன்ம ஸ்தானம் என்று சோதிட நூல்கள் கூறுகின்றன. வியாழ பகவான் 5ம் வீட்டில் இருக்கும்பொழுது மங்கள காரியங்கள் இல்லத்திலே நடத்தல். புத்திரபேறு உண்டாதல், நாற்கால் சீவன லாபங்கள், பொன்பொருள் சேருதல், புதுமனை, பூமி ஆகியனவற்றால் சிறப்படைதல் என்பன உண்டாம். வியாழன் 4ம் வீட்டிலிருந்த போது பட்ட கஷ்டங்கள் நீங்கும். உற்றார் உறவினரின் சகாயங்கள், புதிய தொழில் கிடைத்தல் அல்லது ஆரம்பித்தல், பதவிஉயர்வு, வெளியூர்ப் பிரயாண நன்மை, அந்நிய இடங்களில் தொழில் வாய்ப்பு கிட்டுதல், புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை மேற்கொள்ளல், பெற்றோர் பெரியோர், குருநல்லாசிகள் கிடைத்தல் ஆகியனவாம். பொதுவாக எல்லாவிதமான சுப கருமங்களில் ஈடுபடுதலும், அதனால் நற்பேறுகளும் உண்டாம். உத்தியோகத்தர்கட்கு எதிர்பாராதவிதமான பதவி உயர்வு, அதிகாரச் சிறப்பு, பொதுமக்களின் நன்மதிப்பு, பண ஆதாயம் ஆகியன உண்டு. பெண்களுக்கு குடும்பச்சிறப்பு உண்டு. விவாகமாகாதோருக்கு நல்ல இடத்தில் விவாகப்பேறும் ஆடை ஆபரணச்சிறப்புகளும் கிட்டும். அஷ்டலட்சுமி கடாட்சம் நிறைந்து விளங்கும். மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைதல் ஆகியனவாம் வியாபாரிகளுக்கு இத்துறையில் அதிக நயம், புதிய தொழில்களை ஆரம்பித்து நடத்த பண வசதி எந்நேரமும் இருக்கும். கமக்காரர்களுக்கு தோட்டங்களில், வயல்களில் பயிர்கள் நன்கு செழித்து வளர்ந்து நல்ல வருவாயைக் கொடுத்தலும், புதிய பூமி வாங்குதல், புதுவகையான பயிர் வகைகளைச் செய்தலும் உண்டாம்.

### கன்னி

கன்னி இராசியாளருக்கு வியாழன் நான்காம் இடத்தில் மாற்றம் பெறுவது பொதுவாக நற்பலன் தீயபலன் சமமாக நடக்கலாம் என்பதைக் காட்டுகின்றது. நான்காம் வீடு மாதுரு ஸ்தானம் ஆகும். தாய்வழிக் கிலேசம் உண்டு. உறவினர்களால், நண்பர்களால் நட்டங்களும் மனக் கவலையும் ஏற்படுதலும், இதனால் மனம் ஒரு நிலையில் இல்லாமல் அலைந்துகொண்டிருக்கும். தொழில் வசதியின்மையும், தொழில்மாறுதலும், வீண் பழி கேட்டலும் உண்டாம். டாம். உத்தியோகத்தர்களுக்கு தொழிலில் சமபலன், தொழில் இடத்தில் சக ஊழியர்களால் தகராறும், கூட்டாளி பங்காளி என்பவர்களின் தொந்தரவுகளும் இருக்கும். மாணவர்களுக்கு கல்வியில் சமபலனும் வியாபாரி, களுக்கு சமசுகமும், இடையிடையே தொழிலாளி முதலாளிகளின் பிணக்குகளும். கடன் தொல்லையால் வியாபாரம் ஸ்தம்பிதமடையும் பெண்களுக்கு வாழ்க்கையில் நன்மையும் தீமையும் சமமாகக் கலந்திருக்கும். திருமணமாகாதோருக்கு மணப்பேறும் உண்டு. கமக்காரர்களுக்கும் விவசாயத்தில் சமபலனே அளிக்கும் மேலும் இக்கன்னி ராசிக்காரருக்கு இப்பொழுது ஏழரைச்சனி காலத்தின் கடைக் கூறும் நடக்கிறது வியாழ பிரீதியும் சனீஸ்வரப்பிரீதியும் அடிக்கடி செய்துவரல் நன்மை பயக்கும். வீண் பிரச்னைகளைத் தவிர்த்து அடக்கமாய், தெய்வ வழிபாடுகளுடன் வாழ்ந்து வரவும். கோளறு பதிகம் படித்து வருதல் நல்லது.

(நாளை வரும்)

## வேதாகம வினாவிடை அதிர்ஷ்டசாலி

(சுண்டிக்குளி)

யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கமும், யாழ். மறைக்கல்வி நிலையமும் இணைந்து நடாத்திய வேதாகமக் கண்காட்சியின்போது நிகழ்ந்த வேதாகம வினாவிடைப் போட்டியில் பரிசு பெறும் அதிர்ஷ்டசாலியாக யாழ் நகரைச்சேர்ந்த கே. ஜெயசீலன் தெரிந்தெடுக்கப் பட்டுள்ளார். இவருக்குரிய பரிசாக ரூபா ஐம்பது கிடைக்கிறது. யாழ். மறைக்கல்வி இயக்குனர் வண. பிதா என். நிக்கிலஸ் அடிகளால் வழங்கப்படும்.

## வீடியோ ஆசாமி!

(சுண்டிக்குளி)

அச்சுவேலியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் நெல்லியடிப் பகுதியில் ஏழு வீடியோ கசட்டுகளை வாடகைக்கு வாங்கி தலைமறைவாகி, நீண்டநாட்களுக்குப் பின் யாழ். நகரில் கண்டுபிடிக்கப்பட்டார். இவ்விளைஞர் பருத்தித்துறைப் பொலிசில் ஒப்படைக்கப்பட்டு விசாரணை நடைபெறுகிறது.

# ஜனாதிபதிவவனியாவிஜயம்: கூட்டணிகலந்துகொள்ளாது

[வவனியா]

ஜனாதிபதியின் வவனியா விஜயத்தின்போது கூட்டணி பிரமுகர்கள் கலந்துகொள்ள மாட்டார்கள் என நம்பகமாகத் தெரியவருகிறது.

வரும் 19ம் திகதி வவனியா ஆஸ்பத்திரி சந்தியில் புத்தர் சிலை அமைந்துள்ள காணிக்குள் 10 லட்சம் ரூபாய் செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தொல்பொருள் நூதனசாலையின் கட்டிடத்தைத் திறந்துவைப்பதற்காகவே ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன வவனியா வரவிருக்கின்றார்.

இவரது விஜயத்தின்போது வவனியாவில் வைத்து ஜனாதிபதிக்கு சிறப்பான வரவேற்பு அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றது.

ஆஸ்பத்திரி சந்தியிலும் முக்கிய நகரின் பிரதான இடங்களிலும் அலங்கார வளைவுகள் பந்தல்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

பாடசாலைப் பிள்ளைகளும் பெருமளவு வைபவத்தில் கலந்துகொள்ளவேண்டுமென அறிவுறுத்தல் வழங்கப்பட்டு இருக்கிறது.

திறப்புவிழா வைபவத்தில் இங்குள்ள முக்கிய சில கூட்டணி பிரமுகர்களும் அழைக்கப்படலாம். ஆனல் கூட்டணியினர் எவருமோ குறித்த வைபவத்தில் கலந்துகொள்ள மாட்டார்கள் என நம்பகமாகத் தெரியவருகிறது

## ஆங்கில மொழிப் பயிற்சி

[பண்டத்தரிப்பு]

வளர்ந்தோர் கல்வித் திட்டத்தின்கீழ் யாழ். மாவட்டத்தில் அடுத்த ஆண்டில் ஆங்கில மொழிப்பயிற்சி வகுப்பு நடத்தப்படவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 15இடங்களில் இந்த ஆங்கில மொழிப் பயிற்சி வகுப்புகள் நடைபெறவிருப்பதாகவும், 16 வயதுக்கு மேற்பட்டவர்கள் இந்தப் பயிற்சி வகுப்புகளில் கலந்துகொள்ள முடியும் என்றும் யாழ். மாவட்ட வளர்ந்தோர் கல்வி அதிகாரி திரு. சி. எஸ். சுப்பிரமணியம் இதுபற்றிய தகவல் தருகையில் தெரிவித்தார்.

## தட்டுப்பாடு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி தபால் அலுவலகத்தில் முத்திரைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

தபால் அலுவலகத்தில் முத்திரைகள் தட்டுப்பாடு காரணமாக, சாவகச்சேரியில் உள்ள வங்கிகள், தமது வாடிக்கைக்காரர்களுக்கான மாதாந்த அறிக்கைகளை அனுப்புவதில்கூட தாமதம் ஏற்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது. (கு)

## இன்றைய பலன்

கார்த்திகை 27-ந் திகதி செவ்வாய்க்கிழமை (13-12-83)

மேடம்: வாய்ச் சொல்லில் வீராப்புக் காட்டுவீர். குடும்ப நிலையில் குதூகலம் பொங்கும். தொழில் துறையிலும் முன்னேற்றம் தென்படும் வியாபாரிகளுக்கும் மாணவர்களுக்கும் உகந்த தினம்.

இடபம்: சகாக்கள் சாதகமாகவேவாரி விடுவர். பிரிவு துயரத்தைத் தரும். சகோதரங்களின் நிலை மனவருத்தத்தைத் தரலாம் உடல்நிலையிலும் மாற்றம் தென்படும் சுகாதாரம் நன்று.

மிதுனம்: தாய்வழிச் சுகம் தாராளமாக கிடைக்கும் உறவுகள் பலப்படும் உயர்வுக்கு வழிபிறக்கும், இயந்திரங்களுடன் பழகுபவர்களுக்கு புகழுரையும் பொருள் வரவும் கிடைக்கும்.

கடகம்: புத்திர வழியால் புகழ்ச்சிக்கு இடமுண்டு. சமயோசித நடவடிக்கையின் மூலம் எதையும் வெற்றிகாண முடியும். குடும்பத்திலும் பிணைப்புகள் இறுகும், மகிழ்ச்சிகரமான தினம்.

சிங்கம்: முன்னேற்றத்தை தடைசெய்வதற்கு விஷமிகள் சதி செய்வர். சிலருக்கு அன்னிய வாசமும் அகால போசனமும் உண்டு. பிரயாணத்தின் போது பொருள் தவறக்கூடலாம்.

கன்னி: இனிமையின் அழைப்பு இன்று உங்களுக்கு கிடைக்கும். இல்லம் பல்கலைக்கழகமாக மாறும் சாஸ்திர வழியாலும் கண்ணியம் சேரும், காதல் விடயங்கள் களை தொடுக்கும்

துலாம்: வேண்டிய ஒருவரைப் பகைத்துக் கொள்ள நேரிடலாம். அவசரப் போக்கினால் ஆபத்துக்கள் நேரக்கூடும். சிலர் வாழ்க்கையில் பிரிவுத்துயர் வாட்டும். சஞ்சலமுண்டு.

விருட்சிகம்: ஆலய வழிபாட்டில் ஆர்வம் பிறக்கும் விருந்தினர் வருகையால் வீடே கலகலப்பாக இருக்கும். பெரியோரைப் பேணவும் முயற்சியால் முன்னேற்றம் ஏற்படும்.

தனுசு: வியாபாரிகளுக்கு விருத்திக்கு இடமுண்டு புதிய முயற்சி இன்று கைகூடும். செலவினங்கள் கைக்கடங்கியதாக இருக்கும் சிலருக்கு முட்டப்பிரின் மூலம் மகிழ்ச்சியும் உண்டு.

மகரம்: வாழ்க்கை இன்று மல்லிகைத்தோட்டம் போல் மணம்பரப்பிக் கொண்டிருக்கும், மெத்தவும் பொருள் சேரும். மேலிடத்து ஆதரவும் தப்பமேல் உண்டு! மகிழ்ச்சிகரமான தினம்.

கும்பம்: இன்று எதிலும் நிற்சயமற்ற நிலைமை தென்படும் மனதில் விரகத்திநிலை தென்படும் உணர்ச்சிவசப்படுவதால் வேண்டாத விளைவுகள் உண்டாகும்.

மீனம்: முன்னேற்றம் தடைபடும். குறுக்குவழித் தலையீடு குழப்பத்தை உருவாக்கும். குமுறும் நெஞ்சத்துடன் நாளைக் கடத்துவீர்கள், பிரயாணத்தை தவிர்ப்பது விரும்பத்தக்கது.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## கணவன் கொலை

# மனைவி பிணையில் செல்ல அனுமதி

(வவனியா)

செட்டிக்குளம் சுப்பையா என்ற நபர் கொலை தொடர்பாக சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ள இறந்தவரின் மனைவியை பிணையில் செல்ல வவனியா மேல்நீதி மன்ற நீதிபதி அனுமதி வழங்கியுள்ளார்.

வவனியா மேல்நீதிமன்ற நீதிபதி திரு. ஜே ஜி ஆசீர்வாதம் முன்னிலையில் சந்தேக நபரை பிணையில்செல்ல விடுமாறுகோரி பிணை விண்ணப்பத்தை சட்டத்தரணி திரு. எம். சிற்றம்பலம் தாக்கல் செய்திருந்தார்.

செட்டிக்குளம் சுப்பையா என்ற (40 வயது) நபர் வெட்டிக்கொலைசெய்யப்பட்டது தொடர்பாக இவரது மனைவி ஐயம்மா சுப்பையா வவனியா பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு இருந்தார். சந்தேகநபரின்சார்பில் சட்டத்தரணி தாக்கல்செய்த பிணை மனுவை பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டபோது அரசதரப்பு சட்டத்தரணி திரு. எஸ். சிறீஸ்கந்தராஜா சந்தேகநபரை பிணையில் செல்லவிடுவதற்கு தமக்கு ஆட்சேபனையில்லை என்றார்.

நீதிபதி இரண்டாயிரம் ரூபாய் பிணையில் செல்ல அனுமதி வழங்கினர்.

## தாயைக் கொன்ற தனயன்:

# மனநோய் நிபுணர் அறிக்கை கோரப்பட்டுள்ளது

(நல்லூர்)

பெற்ற தாயைக் கொலை செய்ததாகக் குற்றஞ் சுமத்தப்பட்டுள்ள எதிரியை மனநோய் நிபுணரின் பரிசோதனைக்கு அனுப்பி அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதவான் ஐ. ஜே. ஆசீர்வாதம் சிறைச்சாலை அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

இவ்வழக்கில் தெய்வானை என்னும் பெண்ணைக் கொலை செய்ததாக அவருடைய மைந்தன் கனகலிங்கம் என்பவருக்கு எதிராகக் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அரச சட்டத்தரணி சுந்தரம் சிறீஸ்கந்தராசா அறிவித்தார்.

''எதிரியிடமிருந்து எவ்விதத் தகவல்களும் எனக்குக் கிடைப்பதாக இல்லை. தாயார் இன்னும் உயிருடன் இருப்பதாகவும், தன்னை நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையின்போது சந்தித்ததாகவும் கூறுகிறார்'' என்று எதிரி தரப்புச் சட்டத்தரணி இராஜன் செல்லத்தம்பு எடுத்துரைத்தார்.

''எதிரி மனமுடைந்த நிலையில், உளப் பாதிப்புக்குள்ளாகி இருப்பதாக நான் உணர்கின்றேன். இவரை மனநோய் சிகிச்சை நிபுணரிடம் அனுப்பிப் பரிசோதித்தல் அவசியம். இவர் தன்மீது சுமத்தப்பட்டுள்ள இக்குற்றவியல் வழக்கில் தான் குற்றவாளியா அல்லது சுற்றவாளியா என்று வாதிக்கும் நிலையில் உள்ளாரா என்று அந்நிபுணரிடமிருந்து நீதிமன்றம் ஓர் அறிக்கை பெறவேண்டும் என்று நீதியின் பெயரால் கோருகிறேன்'' என்று சட்டத்தரணி இராஜன் செல்லத்தம்பு மனுச்செய்தார். இதைத் தொடர்ந்தே மேற்கூறிய பணிப்புரை வழங்கப்பட்டது.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

# 1984-ம் ஆண்டுக்கு

## வழங்குநர்களைப் பதிவுசெய்தல்

1984-ம் ஆண்டுக்கு (அ) இருப்பிலிருந்தும் (ஆ) இறக்குமதிசெய்தும் பின்வரும் பொருட்களையும் சேவைகளையும் வழங்குவதற்குத் தாமாகவே பதிவுசெய்ய விரும்பும் இலங்கையிலுள்ள வியாபார நிறுவனங்கள். உற்பத்தியாளர்கள், மூகவர்கள், தனி ஆட்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பங்கள் ''1984 ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களைப் பதிவுசெய்தல், எனக் கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் நிதியாளருக்கு 1983-12-31 தேதியில் அல்லது இதற்கு முன்னதாகக் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத்தபாலில் இணைப்படியில் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

3. குறிக்கப்பட்ட ஒவ்வொரு பொருட்கள், சேவைகளின் இனம் தொடர்பாக வெவ்வேறு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல்வேண்டும். இப்பல்கலைக்கழகத்துடன் 1983 ஆம் ஆண்டுக்காகப் பதிவுசெய்துள்ள வழங்குநர்கள் 1984 ஆம் ஆண்டுக்கும் புதிய விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. பதிவுசெய்வதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றுடனும் மீளளிக்கப்படாத பதிவுசெய்தற் கட்டணத்திற்கான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பெருக்கு எழுதப்பெற்ற 25 ரூபா பெறுமதியான காசோலை/காசுக்கட்டளை இணைத்தனுப்பப்படல்வேண்டும்.

5. வழங்குநர்களைத் தெரிவுசெய்யும் உரிமையைப் பல்கலைக்கழகம் கொண்டுள்ளதுடன் அதனது தீர்மானம் இறுதியானதாகும். கூறுவிலைகளைக் குறித்ததன் பின்னர் வழங்கல் செய்யத்தவறும் அல்லது கட்டளையிட்டதன்பின்னர் அவற்றை உரியகாலத்தில் ஒப்படைக்கத் தவறும் அல்லது மாதிரிகள் விபரக்கூற்றுக்கள் ஆகியவற்றுக்கு இசைவற்றவளங்கல்களைச் செய்யும் வழங்குநர்கள் அறிவித்தலின்றி வழங்குநர்கள் பதிவேட்டிலிருந்து நீக்கப்படுவர்.

6. பின்வரும் தகவல் உட்பட எல்லா விபரங்களையும் விண்ணப்பம் கொண்டிருத்தல்வேண்டும்.

அ. பொருட்கள் சேவைகளின் வழங்கல்கள் (பொருட்கள்-இறக்குமதி/இருப்பிலிருந்து வழங்குதல்.)
ஆ. தனிப்பட்ட/வியாபார நிறுவனத்தின் பெயரும் முகவரியும்
இ. தொலைபேசி இலக்கம்-தந்தி முகவரி
ஈ. வியாபார நிறுவனத்தின் இயல்பு (தனி உரிமையாளர், பங்குடமை, பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனி ஆகியவற்றில் எது எனக் குறிப்பிடவும்)
உ. பதிவு இலக்கம் (வியாபாரப் பெயர்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டிருப்பின்)
ஊ. வங்கியாளர்கள் பெயர்கள்
எ. விசாரிக்கக்கூடிய வழிகள் (ஏதாவது இருப்பின்)
ஏ. கிடைக்கத்தக்க கடன் வசதிகள் எல்லா உரிய விபரங்களை அளிக்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

### பொருட்கள் / சேவைகளில் வழங்கல்

1. செங்கட்டி, மணல், ஓடுகள், சல்லி, உலோகம், நீரிட்ட சுண்ணும்பு உட்பட எல்லாக் கட்டிடப் பொருட்கள் (இனங்கள் குறிப்பிடப்பட வேண்டும்)
2 மரம்
3. மின்சார உபகரணங்களும் உதிரிப்பாகங்களும்
4. எல்லாவிதமான இரும்புச் சாமான்கள்
5. இயந்திரங்களும் உதிரிப்பாகங்களும்
6. ரயர்களும், ரியூப்களும்
7 வேலைத்தளக்கருவிகளும் உபகரணங்களும்
8. தீயணைக்கருவிகளும், பாதுகாப்பு உபகரணங்களும்
9. எல்லா விதமான குழாய்களும் குழாய் இணைப்புக்களும்
10 நிறப்பூச்சுக்களும் துணைக்கருவிகளும்
11. எல்லா வகையான வாகனங்களுக்கான உதிரிப்பாகங்கள்
12. வரன் மின் கல அடுக்கு (மோட்டார் வாகனங்கள்)
13. துவிச்சக்கர வண்டிகளும் உதிரிப்பாகங்களும்
14. எல்லா விதமான எழுது கருவி வகைகள்
15. அலுவலக உபகரணம்
16. அலுவலகத் தளபாடம் (மரம்/உருக்கு)
17. ஆய்வுகூட உபகரணமும் இரசாயனப் பொருட்களும்
18. முதலுதவித் தேவைகளும் மருந்துகளும்
19. சப்பாத்துக்கள், பசைதடவி விறைப்பாக்கிய நெடுஞ் சப்பாத்துக்கள், மழை அங்கிகள்
20. தளபாட, உபகரண ஆடைவகை, புடவை நுளம்பு வலைகள்
21 இறப்பர் உற்பத்திப் பொருட்கள்
22 இயந்திர உதிரிப்பாகங்களைச் செய்து உருவாக்கல்
23. வாகனங்களின் பொடி நிர்மாணம்
24. தகர வேலையும் சிறிது நிறப் பூச்சும் (ஸ்பிறே பெயின்ரிங்)
25. ரயர்களை மீள அமைத்தலும் வல்கனைற்றல் ஒட்டலும்
26. எல்லா வகையான அச்சிடல்கள்
27. எல்லா வகையான மின் கல அடுக்குகள்
28. மின்சார மோட்டார் முறுக்குகள் கம்பி இணைத்து அமைத்தலும் (வயறிங்/ஏனைய மின்சார நிறுவுகல்களும்)
29. வாகனங்களைப் பழுதுபார்த்தலும் மறுசீராக்கலும்
30. மின் பொருட்களைத் திருத்துதல்
31. அலுவலக உபகரணங்களைத் திருத்துதல்
32. கட்டடங்களைப் பழுதுபார்த்தல்
33. அச்சுப்பாளம், இறப்பர், பொறிகள், பித்தளை அடையாளங்கள் முதலியன
34. புத்தகங்களும் பருவ இதழ்களும்
35. விளையாட்டுப் பொருட்களும் நலப்பொருட்களும்
36. போக்குவரத்து
37. கட்டடங்கள், தெருக்கள் ஆகியவற்றை அமைத்தலும் பராமரித்தலும்
38. சரக்குமேடை/ விமானக்கட்டணம் அலுவலகம்/தலைமைத்தபால் அலுவலகம் ஆகியவற்றிலிருந்து பொருட்களை அகற்றுதல்
39. சீருடைகள் வழங்கலும், தைத்தலும்
40. திரை மெத்தையிடலும், பின்னுதலும்.

நிதியாளர்
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம், இலங்கை,
திருநெல்வேலி. 10446

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
ஜெய்சங்கர் - பாரதி
**உங்கள் விருப்பம்**
(புதிய பிரதி)

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-00
**காதலிக்க நேரமில்லை**

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
கமலஹாசன் - பிரமிளா
**அரங்கேற்றம்**
15-12-83 முதல்
எங்க தங்க ராஜா

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சரோஜாதேவி
**பாகப்பிரிவினை**

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30
6-00,
கமல்-ஸ்ரீதேவி
சில்க் சுமிதா
**மூன்றாம் பிறை**
(வெள்ளிவிழா சித்திரம்)

**சாந்தி** (யாழ். நகர்)
10.30, 2.30, 6.30 மட்டும்
5-வது வெற்றி வாரம்
சிவாஜி - கே. ஆர். விஜயா
நடிப்பால்... படப்பிடிப்பால் இனிய இசையால்...
சிறந்த கதையால் உயர்ந்த
**ஊரும் உறவும்**
வண்ணச்சித்திரம்

**மனோகரா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி — K. R. விஜயா
...
நிறம்பட நடித்த
வண்ணப்படம்
**சத்திய சுந்தரம்**

**லிடோ** (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
**நீரும் நெருப்பும்**
(கலர்)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
**ரகசிய பொலிஸ் 115**

**வின்ஸர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15, 9-30
தென்னகத் திரைவானில் தேன்சிந்தும் அமுத ராகமாய், காதலின் அமர காவியமாய் பார்ப்பவரைப் பரவசமூட்டி - மீண்டும் பார்க்கத்தூண்டும் - சிந்திக்க வைக்கும் - அதி உன்னத காதல் ஒவியமாய் பவனி வந்த வண்ணத்திரை விருந்து!
சிவகுமார் - ராதா
(அலைகள் ஓய்வதில்லைபுகழ்)
சிவச்சந்திரன் - அருணா
நடித்த
**ஆனந்தராகம்**

## மருத்துவமாதை நியமிக்கக் கோரிக்கை

(மன்னார்)

''மன்னார் - பறப்பாங்கண்டல் கிராமத்திற்கென தனியானதொரு மருத்துவமாதை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்'' என்று கோரும் மகஜர் ஒன்றை பறப்பாங்கண்டல் கிராமோதயசபை தலைவி திருமதி ஏ. றமணி மரியநாயகம் குரூஸ் மன்னார் பிரதேச சபையினூடாக சுகாதாரத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

## புதிய உறுப்பினர் தெரிவு

[ஊரெழு]

வலிகிழக்கு தென்பகுதி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர் சபையில் ராஜினாமா செய்த இருவரின் இடத்திற்கு புதிய உறுப்பினர்கள் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டனர். திரு. கு. பரமராசா, திரு. சி. மகேந்திரம் ஆகியோரே புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களாவர். கடந்தவாரம் நடைபெற்ற மேற்படி சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டத்தில் இவர்களின் தெரிவு இடம் பெற்றது.

பன்குளம் கொலைவழக்கு;

# விடுதலையான 3 எதிரிகள் மீதும் மீண்டும் வழக்கு தாக்கல்!

[திருகோணமலை]

பன்குளம் கொலைவழக்கில் திருகோணமலை நீதவானால் விடுதலை செய்யப்பட்ட மூன்று எதிரிகள் மீதும் உப்புவெளிப் பொலிசார் புதிதாகக் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தனர்.

உப்புவெளிப் பொலிஸ் சார்ஜன்ட் கைலைநாதன் குற்றப் பத்திரிகைகளை திருகோணமலை பதில் நீதவான் திரு எம். கே. யசல்வராசா முன்னிலையில் தாக்கல் செய்தார்.

குற்றப்பத்திரிகைகளை ஏற்றுக்கொண்ட பதில் நீதவான், எதிரிகள் மீது சம்மன்ஸ் பிறப்பித்து விசாரணையை ஜனவரி 5-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

பன்குளம் கொலைச்சம்பவம் திருகோணமலை வன்செயலில் இடம்பெற்ற முதலாவது கொலையாகும்.

நாகராசா ஸ்ரீஸ்கந்தராஜா என்ற இளைஞனை ஜூன் 6ந்தேதி பன்குளத்தில் வைத்துச்சுட்டுக் கொலை செய்ததாக புஞ்சி பண்டா, விக்டர் குருகே, மாபா கிரிபண்டா ஆகியோர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கே. கந்தையாவிடமிருந்து 20.000 ரூபா பணத்தைக் களவாடியதாக இரண்டாம் எதிரி விக்டர் குருகே மீதும் கே. கந்தையாவிற்குப் படுகாயம்விளைவித்ததாக மூன்றாம் எதிரியான மாபா கிரிபண்டா மீதும் மேலும் குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது

இக்குற்றச்சாட்டுக்கள் மூன்று எதிரிகள்மீதும் முன்னர் சுமத்தப்பட்டன, அவ்வழக்கைத் திருகோணமலை மாவட்ட நீதவான் திரு. ஜோர்ஜ் பெரேரா விசாரித்து வந்தார்

விசாரணையின் ஒரு கட்டத்தில் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட ஒருநாள் பொலிசாரும் முக்கிய சாட்சியான கந்தையாவும் நீதிமன்றத்திற்குச் சமூகமளிக்கத் தவறிவிட்டனர். இதைக் காரணமாக வைத்து மேலதிக நீதவான் எதிரிகளை விடுதலை செய்தார்.

இப்பொழுது புதிதாக மீண்டும் 3 எதிரிகள் மீதும் கொலைக் குற்றஞ் சுமத்திக் குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. — —

## அகதிக்கு வீடு

(புலோலி)

பருத்தித்துறையில் ஸ்ரீசிவாய சுப்பிரமணியஇல்லமென்ற பெயரில் இல்லமொன்று அமைக்கப்பட்டு பருத்தித்துறை அகதிகள் முகாமில் இருக்கும் குடும்பமொன்றிற்கு வழங்கப்படவுள்ளது. (கு)

## குற்றத்தை ஒப்புக்கொண்டார்

(திருகோணமலை)

2050 ரூபா பெறுமதியான தங்கத்தாலியைக் களவெடுத்த குற்றத்தை ஒப்புக்கொண்ட எதிரியான கார்த்திகேசு கமலராசன் என்பவருக்கு தண்டனை வழங்குவதைத் திருகோணமலை நீதவான் டிசம்பர் 21-ம் திகதி வரை ஒத்திவைத்தார்.

சின்னத்துரை கணேசமூர்த்தி என்பவருக்குச் சொந்தமான தங்கத்தாலியே களவாடப்பட்டது. களவுபோன தங்கத்தாலியை திருமலை சார்ஜன்ட் தணிகாசலம்பிள்ளை கிண்ணியாவில் உள்ள நகைக்கடை ஒன்றில் இருந்து கைப்பற்றினர்.

நல்லூர்

## சிவன் கோவிலில் விஷேச அபிஷேகம்

[யாழ்ப்பாணம்]

இம்மாதம் 16ம் திகதி நிகழவிருக்கும் வியாழமாற்றத்தினால் தீயபலன்கள் நிகழாவண்ணம் வேண்டி, நல்லூர் சிவன் கோவிலில் 17ம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு தெட்சணாமூர்த்தி சுவாமிக்கும் வியாழ பகவானுக்கும் விசேட பூசை அபிஷேகம் நடைபெறவுள்ளது. — —

## ஒத்துழைப்பு வழங்க வேண்டுகிறேன்

(புலோலி)

இந்நாட்டில் மீண்டும்தேசிய ஐக்கியத்தையும், சமாதானத்தையும் நிலைநாட்டும் இலட்சியத்துடன் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன எடுக்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைளுக்கும் இந்நாட்டின் சகல முற்போக்கு சக்திகளின் பூரண ஆதரவையும், ஒத்துழைப்பையும்வழங்க வேண்டுமெனச் சகலரையும் வேண்டிக் கொள்வதென்ற பிரேரணை ஒன்றைச் சட்டத்தரணி வ. மகாலிங்கம் பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கத்திடம் சமர்ப்பித்துள்ளார்

# ஆடம்பரமற்ற வருடாந்த விளையாட்டு விழா!

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க வருடாந்த விளையாட்டுப்போட்டி இம்முறை ஆடம்பரமற்றமுறையில் நடாத்தப்பட்டது.

போட்டிகளில் கீழ்ப்பிரிவு சாம்பியனாக திரு. ஆர். கிருபானந்தன் தெரிவு செய்யப்பட்டார். மேற்பிரிவு சாம்பியனாக திரு. ஆர். சச்சிதானந்தன் தெரிவானார்.

கீழ்ப்பிரிவு சாம்பியன் வெற்றிக்கிண்ணம் பரமேஸ்வராக் கல்லூரி நினைவாக அதன் பழைய மாணவன் திரு. ரி. ரகுநாதனால் அன்பளிப்புச் செய்யப்பட்டது.

மேற்பிரிவு சாம்பியன் வெற்றிக்கிண்ணம் திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க முன்னாள் அங்கத்தவர் அமரர் வி. சர்வலோகநாயகம் நினைவாக ஆசிரியை திருமதி. ச. அருந்தவநாதனால் அன்பளிப்புச் செய்யப்பட்டது.

பரிசளிப்பு விழாவில் மேற்படி சங்கத்தலைவர் திரு. ஜெயக்குமார் தலைமை தாங்கினார் சிறப்பு விருந்தினராகமாவட்ட முகாமையாளர் இலங்கை வங்கி திரு. செ. சிறிரங்கநாதன் கலந்து கொண்டார். விளையாட்டுவிழா ஏற்பாடுகளை சங்க விளையாட்டுக்காரியதரிசி திரு. பொ. விஜயேந்திரன் மேற்கொண்டிருந்தார். (கி)

## தமிழ்....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

''இனம், சாதி, மதம், வர்க்கம் போன்றவற்றால் மனிதன் பிரிக்கப்படவில்லை. இனரீதியில் எந்தவொரு பிரிவினராவது பாதிக்கப்படுவதைத் தொழிலாள வகுப்பு அனுமதிக்கப்போவதில்லை. ஆட்சிக்கு வந்த எந்த அரசாங்கமாவது இந்தப் பிரச்சினைக்குச் சரியான முடிவெடுக்கவில்லை உண்மையாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் குறைபாடுகளையும், போராட்டங்களையும் அடக்குமுறைகளால் அல்லது புதுப் புதுச் சட்டங்களால் தீர்த்து வைக்கவியலாது. (சாவ. நிரு)

**Regal**
Daily 10-30, 2-30, 4-45
7-00 p m Only
பரபரப்பான
**காதல் விவகாரம்...**
தன் பணத்தால் எதையும் செய்யக்கூடிய வல்லமைபொருந்திய கிரேக்க தேசத்து கோடீஸ்வரனும், பிரபல்யம் வாய்ந்த முதல் பெண்ணும் ஆகிய ஒனாசிஸ் - ஜாக்குலின் கென்னடியின் காதலை சித்தரிக்கும் காவியம்
Anthony Quinn......
Jacqueline Bisset...... in
**The Greek Tycoon**
(Color)
வெகு விரைவில்
**பயணங்கள் முடிவதில்லை**

**வெற்றிடங்கள்**
முல்லைத்தீவில் ஆரம்பமாகும் வேலைத்தளமொன்றில் உள்ள பின்வரும் வெற்றிடங்களுக்கு உடனடியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- **வேலைத்தள முகாமையாளர்** (WORKSHOP MANAGER)
தொழில்நுட்ப அறிவு விரும்பத்தக்கது; ஆனால் அத்தியாவசியமல்ல நிலையத்தைப் பொறுப்பேற்று நிர்வகிக்கும் திறன் முக்கியம்.
- **களஞ்சியப் பொறுப்பாளர்** (STORE - KEEPER)
இயந்திர உதிரிப்பாகங்கள் பற்றிய அனுபவம் விரும்பத்தக்கது ஏனையோரும் விண்ணப்பிக்கலாம்.
- **மெக்கானிக்குகள்** (MECHANICS)
அவுட்போட் மோட்டர் திருத்துவதில் முன் அனுபவம் இருக்கவேண்டும். மேலதிக பயிற்சி வழங்கப்படும்.

**டைனமிக் என்ஜினியரிங் லிமிற்றெட்,**
காங்கேசன்துறை வீதி, தெல்லிப்பளை

**யாழ். மக்களுக்கோர் மகிழ்ச்சியான செய்தி**
நீங்கள் வெளிநாடு செல்லவேண்டுமா?
உங்கள் பிரயாணச்சிட்டுக்களை இன்றே யாழ்நகரிலேயே பதிவு செய்துகொள்ள நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்
**குரோஸ் ட்ரவல் சேர்விசஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**
கொலன்ட் வழியாக பிரான்ஸ், ஜெர்மனி செல்வதற்கான சகல ஏற்பாடுகள்,
மற்றும் பெல்ஜியம் விசாவுடன் பயணச்சிட்டுக்களை மிகக் குறைந்த கட்டணத்தில் பெற உடனே நாடுங்கள்.
**CROSS TRAVEL SERVICES (PTE) LTD.**
STAGE II MODEL MARKET,
No. 5, 1st FLOOR,
BUS STAND CENTRE ROAD,
JAFFNA.
Phone No. 22065, 22040
★ பேளின் (BERLIN) ரூபா 9.500/- ஒரு வழி பயணச்சிட்டு

# "அண்ணனை கட்டிவைத்திருப்பதாக தம்பி சொன்னார்; அங்கு சென்றபோது----- அவர் கிணற்றடியில் இறந்து கிடந்தார்!"

(மாவிட்டபுரம்)

"சம்பவதிற்கு முதல் நாள் இறந்த தமது அண்ணனை கட்டிவைத்திருப்பதாக அவரது தம்பி என்னிடம் வந்து சொன்னார். நான் அங்கு போகவில்லை. மறுநாள காலை அங்கு சென்றபோது இறந்தவர் தமது வீட்டுக்கிணற்றடியில் சேற்றுக்குள் இறந்துகிடந்தார். அருகில் ஓர் நச்சுப்போத்தலும் கிடந்தது."

இவ்வாறு புன்னாலைக்கட்டுவன் ஈவினையைச்சேர்ந் இராசையா கமலநாதன் என்னும் 24 வயது வாலிபரின் மர்ம காரணம்குறித்து நடந்தமரண விசாரணையில் சாட்சியமளித்த இறந்தவரின் மைத்துனர்செல்லையா சிவநேசவேல் கூறினார்.

நவம்பர் மாதம் 26ம் திகதி நடந்த இச்சம்பவம் தொடர்பாக ஏற்கனவே ஸ்தல விசாரணை மேற்கொண்டமல்லாகம் நீதிபதி திரு. சீ. வி. விக்னேஸ்வரன் தொடர்ந்து மரணவிசாரணையை மல்லாகம் நீதிமன்றத்தில் நடத்தினார்.

அச்சமயம் விசாரணையின் போது இறந்தவரின் மைத்துனர் சிவநேசவேல் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

"இறந்தவர் எனது மைத்துனர் ஆவார். அவரது வீட்டுக்கு அருகில் நான் வசிக்கிறேன். இறந்தவரின் வீட்டில் அவரும், அவரது தம்பியும். இரு சகோதரிகளும், பாட்டியான தங்கமுத்துவும் இருந்தனர். சம்பவத்திற்கு முதல் நாள் நான் எனது வீட்டில் இருக்கும்பொழுது இறந்தவரின் தம்பி எனதுவீட்டுக்கு வந்தார். இறந்த தமது அண்ணனை வீட்டில் கட்டிவைத்திருப்பதாகவும், தமது சைக்கிளைத்திருடியது குறித்து மறுநாள் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டுபோகவேண்டுமெனவும் கூறினார். அவரை வந்து பார்க்கும்படியும் அழைத்தார். நான் போகவில்லை. "இப்போது நேரமில்லை காலையில் வருகிறேன் என்று அவரிடம் கூறினேன். காலையில் அங்கு போனேன். இறந்தவர்வீட்டில் எவரும் இல்லை வீட்டின் பின் பக்கமாக கிணற்றடியில் சனங்கள் நின்றனர். இறந்தவரின் சகோதரியும் அங்கு நின்றார். கிட்டப்போய் பார்த்தபோது சேற்றில் அவர் இறந்து கிடந்தார். அவரது உடலில் சிறுசிறு காயங்களும் இருந்தன. காயங்கள் எங்கு இருந்தனவென சரியாக தெரியாது. கையிலும், நெற்றியிலும் காயங்கள் தெரிந்தன. அவருக்கருகில் நஞ்சுப் போத்தல் ஒன்றும் கிடந்தது. நஞ்சு குடித்து இறந்ததாக கருதினேன் என்றார்.

இறந்தவரின் தம்பியான இராசையா கமலேஸ்வரன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது: இறந்தவர் எங்களுடன் வீட்டில் வாழ்ந்துவந்தார் அவர் எம்முடன் அடிக்கடி சண்டைபிடிப்பார் வீட்டிலிருந்து புறப்பட்டால் 2,3 மாதத்திற்குபின்பேதிரும்பிவருவார் இது மாதிரி 2மாதம் கழித்து சம்பவதினத்திற்கு முதல்நாள் வீட்டுக்கு வந்தார். அன்று நல்ல மதுவெறியில்இருந்தார். முன்னர் நான் வீட்டில் இல்லாத நேரம் பார்த்து எனது சைக்கிளை அவர் தூக்கிச் சென்றிருந்தார். நான் எனது சைக்கிளைத்தருமாறு அவரிடம் கேட்டேன் அவர் மறுத்தார். நான் அவரை கயிற்றால்கட்டிப் போட்டுவிட்டு மைத்துனர் சிவநேசவேலிடம் கூறினேன். அவர் வந்து பார்க்கவில்லை. அன்று இரவு நான் வேறு ஒரு இடத்திற்குச்சென்று படுத்து விட்டேன் அவரைப்பொலிசில்கொடுப்பதற்காக காலையில் வீட்டுக்குப்போனேன். அவரை அங்கு காணவில்லை. எனது சகோதரி அவரை அவிழ்த்து விட்டாதக கூறினார். பின் கிணற்றடிக்குச்சென்ற சமயம் அங்கு அண்ணர் இறந்துகிடந்தார். அருகில் நச்சுப்போத்தலும் காணப்பட்டது. அவரது மரணத்திற்கும் எனக்கும் சம்பந்தமில்லை என்றார்.

## ஈழத்தை...:

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஈழத்தை விரும்பாத மக்கள் கூட இராணுவத்தை வெறுக்கிறார்கள். வடக்கிற்கு செல்ல வீரர்கள் பயப்படுகிறார்கள். அங்கிருக்கும் வீரர்களின் குடும்பத்தினர் நிம்மதி இன்றி இருக்கின்றனர். (இ-கு)

## திருமலை வேலுப்--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொக்குவில் ஆடியபாத வீதியிலுள்ள தமது இல்லத்தில் காலமான இவரது இறுதிக்கிரியைகள் நேற்று கொக்குவில் மயானத்தில் நடைபெற்றது. இவர் இறக்கும் போது வயது 73,

கடந்த இருபத்தைந்து ஆண்டுகாலமாக 'ஈழநாடு' பத்திரிகையோடு நெருங்கிய தொடர்பு வைத்திருந்த இவர், தினப் பலனும், வாரப்பலனும் தவறாது எழுதிவந்துள்ளார்.

இம்மாதம் முடியும்வரையான தினப்பலனும் இரு வார மலருக்கான வாரபலனும் முன்னதாக 'ஈழநாடு'க்கு அனுப்பிவைத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## தாக்குதலுக்கு வயோதிபர் பலியானார்!

(யாழ்ப்பாணம்)

சுன்னாகத்தைச்சேர்ந்த 70 வயது வயோதிபரான அப்பையா என்பவர் தாக்குதலுக்குப்பலியானார்.

இவர் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆபத்தான நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு நேற்று மரணமானார்.

சுன்னாகம் பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (க)

## திருட்டுப்போன உழவு யந்திரத்தின் உதிரிப்பாகங்கள் சிக்கின!

(வவனியா)

கோவில்குளம் - காந்திய இல்லத்திலிருந்து களவாடப்பட்டதாகக் கூறப்படும் உழவு யந்திர உறுதிப்பாகங்கள் சில வவனியா பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மிகவும் பெறுமதி வாய்ந்த உழவு யந்திர உதிரிப்பாகங்கள் என பொலிஸ் விசாரணையிலிருந்து தெரியவருகிறது. தனியார் வாகனமொன்றில் உதிரிப்பாகங்கள் ஏற்றி வேறு ஓர் இடத்துக்கு செல்லும் போதே வவனியா பொலிசார் இதனை கண்டுபிடித்தனர்.

காந்திய இயக்கம் தடை செய்யப்பட்ட பின்பு கோவில் குளம் காந்திய சிறுவர் இல்லத்திலிருந்து பலலட்ச ரூபாய் பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டன.

## பஸ் சேவை....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வலை போன்ற தூர இடங்களுக்கான பஸ்சேவை இன்று பிற்பகல் 2-30 மணியுடன் நிறுத்தப்படும் என்றும் பாடசாலை பஸ்சேவைகள் இன்று பிற்பகல் 3மணியுடன் நிறுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாளை புதன்கிழமை முற்றாக பஸ்சேவை நடைபெறாது என்று வ. போ. சபையினர் தங்களுக்கு அறிவித்திருப்பதாக கல்லூரி அதிபர் ஒருவர் தெரிவித்தார். (க)

# வதிரிக் கிராம பாதணிகள் இத்தாலிக்கு ஏற்றுமதி!

## விசேட குழு லட்சரூபாய் பெறுமதியான மாதிரிகளை கொள்வனவு செய்தது!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த வதிரி கிராமத்தில் உற்பத்திசெய்யப்படும் பாதஅணிகள் இத்தாலிக்கு ஏற்றுமதி செய்யப்படவிருக்கின்றன. ஏற்றுமதி அபிவிருத்திச்சபையின் உதவியுடன் இந்த வடபகுதி தயாரிப்புகள் இத்தாலிக்கு செல்லவிருக்கின்றன.

கடந்த வாரம் இத்தாலியிலிருந்து விசேட விமான மூலம் இலங்கை வந்த இத்தாலிய சந்தைப்படுத்தும் குழுவினர் வதிரிக் கிராமத்திற்கு விஜயம் செய்து அங்கு உற்பத்தி செய்யப்படும் பாத அணிகளைப் பார்வையிட்டனர். பலஆயிரம் ரூபா பெறுமதியான மாதிரி பாதஅணிகளையும்கொள்வனவு செய்தனர்.

வடக்கில் மேலும் பல உற்பத்தி நிலையங்களைப் பார்வையிட்ட இக்குழுவினர் பல லட்சம் ரூபா பெறுமதியான மாதிரி உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவுசெய்தனர். வதிரி தேவராளி இந்துக் கல்லூரியில் யாழ். அரசாங்க அதிபர் தலைமையில் நடந்த கூட்டம் ஒன்றில் வடபகுதி உற்பத்திப் பொருட்கள் மிகவும் தரமானவை என்றும், இத்தாலிச் சந்தைகளுக்கு உகந்தவை என்றும் இக்குழுவினர் தெரிவித்தனர்.

திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திரு. எஸ். சிவதாசன், பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு க. நடராசா, ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் பிரதிநிதி திரு ஆர். விஜயரத்தின உட்பட பல அரச அதிகாரிகள் இக்குழுவினருடன் தொழில் நிலையங்களுக்குச் சென்றிருந்தனர். (வண்-நிரு)

## வடக்கில்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துக்கு 100 பேர் வீதம் யுத்தப் பயிற்சிக்காக இந்தியா செல்கிறார்கள். இவர்கள் இரகசியமாகவே அனுப்பப்படுகிறார்கள்.

"இந்தியாவுக்கு இவர்கள் செல்வதற்கு குறுகிய பாதை ஒன்று இருப்பதாகக் கூறப்படுகிறது. இதுபற்றி அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

"வடக்கு கிழக்கில் கள்ளத்தனமாக துப்பாக்கிகள் விற்பனை செய்யப்படுகின்றன. துப்பாக்கித் தொழிற்சாலைகளும் இயங்குகின்றன.

"கச்சேரிப் பாதுகாப்பில் இருக்கும் துப்பாக்கிகளை மக்களுக்கு வழங்க வேண்டும். கச்சேரியில்வைத்திருந்ததால்முன்னர் சில கச்சேரிகளில்கொள்ளையடித்ததுபோல இவற்றையும் கொள்ளை அடித்துவிடுவார்கள்.

## கச்சதீவில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி

மூடப்பட்ட சகல பொலிஸ் நிலையங்களும் திறக்கப்பட வேண்டும்.

"திருமலை எண்ணெக்குதங்கள் இந்திய கம்பனிகளுக்கு கொடுக்கப்படவுள்ளதாக முதலில் கூறப்பட்டது பின்னர் அமெரிக்காவுக்கு கொடுத்து விட்டார்கள். இதனால் எமக்கு மட்டுமல்ல இந்தியாவுக்கும் ஆபத்து

"அமிர்தலிங்கத்தின் மகன் ரவியின் கடிதம் பற்றி இங்கு பெரிதாக பேசப்பட்டது இது தவறுதலாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளதாகவும் இடைச் செருகல் இருப்பதாகவும் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்திருந்தார். இதற்கு என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்". (இ-கு)

## மரண அறிவித்தல்

### கந்தையா சோமசுந்தரம்

உரும்பராய் கந்தையா சோமசுந்தரம் (கண்ணாடி-சோமு) காலமானார். இவர் பத்மாவதியின் அன்புக் கணவரும், திருமதி சகுந்தலாதேவி, சாந்திக்குமாரி (U. K.), சாந்தக்குமார், இந்திரகுமார் (U. K.), ரவி (ஆட்டிஸ்ட்), தர்ஷினி ஆகியோரின் தகப்பனாரும், தில்லைராஜா, மங்கையற்கரசி, பஞ்சலிங்கம், தங்கமணி, ஆகியோரின் சகோதரரும், சுந்தரமூர்த்தி, உருத்திரன் (U. K.), ரஜனி (U. K.), செல்வநிதி, ஆகியோரின் மாமனாரும், நவரட்ணம், சச்சிதானந்தம் (ஆசிரியர்), ஆகியோரின் மைத்துனரும், சித்திரகலா, கீதாஞ்சலி, பிரஷாந்தி, சுபாஷினி, சர்மிளா, கஷேந்திரன், ராஜ்பரத், சுரேன் ஆகியோரின் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் ஊரெழு கிழக்கு, "சிவகிரி" இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 2 மணிக்கு (13-12-83) உரும்பராய் வேம்பன் மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

மனைவி, பிள்ளைகள்.

(10439)

## மரண அறிவித்தல்

### - இராசா நாகரத்தினம் -

சித்தங்கேணி இளைப்பாறிய தலைமை ஆசிரியர் இராசா நாகரத்தினம் 11-12-83ல் காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற ரேவதியின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற இரத்தினவதி, இரத்தினவரதன், இரத்தினவதனி, இரத்தினவரதி, ஆகியோரின் அன்புத்தந்தையும், சரோஜினிதேவியின் அன்பு மாமனும், மாலினிதேவி, பிரேமகாந்தன், லோஜிநாத் ஆகியோரின் பாட்டனுமாவார். அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காகச் சித்தங்கேணியிலுள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து இன்று (13-12-83) செவ்வாய்க்கிழமை காலை 10மணிக்கு சங்கரத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

10538

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் அச்சகத்தாரால் யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதி, ... அச்சகத்தில் 1983-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 13-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu- P. O. Box: 49, Telephone: 22389 — 24126.